வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

ඊළනාඩු



MARUTHI MONEY EXCHANGE

மாருதி Money Exchange (Pvt) Ltd.

இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443

இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086

இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

MoneyGram மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேன் யூனியன் பணப்பரிவர்த்தனை



Email : news@eelanadu.lk | மலர் : 03 | 01.07.2022 வெள்ளிக்கிழமை | இதழ் : 207 | பக்கங்கள் : 16


## 10ஆம் திகதி ஹஜ் பெருநாள்!

கொழும்பு, ஜூலை 01

நாட்டின் சில பகுதிகளில் துல் ஹஜ் மாத தலைப்பிறை நேற்று தென்பட்டது. இதனால், எதிர்வரும் 10 ஆம் திகதி ஈதுல் ஹஜ் பெருநாளைக் கொண்டாட தீர்மானிக்கப்பட்டுள்ளது.

துல் ஹஜ் மாத தலைப் பிறையை தீர்மானிக்கும் மாநாடு கொழும்பு பெரிய பள்ளிவாசலில் மஹ்ரிப் தொழுகையின் பின்னர் நேற்று

15

## இலங்கையை ஒருபோதும் அமெரிக்கா கைவிடாது!

### ஜனாதிபதியிடம் தூதுவர் உறுதி!

கொழும்பு, ஜூலை 10

பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண இலங்கைக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்குவதாக இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி ஷங் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விடம் உறுதியளித்துள்ளார்.

நேற்று பிற்பகல், ஜனாதிபதி மாளிகையில் திருமதி ஜூலி ஷங் மற்றும் ஜனாதி

15



## குருந்தூர் மலை வழக்கு; மீண்டும் ஒத்திவைப்பு!

முல்லைத்தீவு, ஜூலை 01

குருந்தூர்மலையில் நீதிமன்ற தடையை மீறி விகாரை கட்டுமான பணி தொடர்பில், பொலிஸரிடம் விளக்கம் கோரிய வழக்கு மீண்டும் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு தவணையிடப்பட்டுள்ளது.

இந்து தமிழர்களின் பூர்வீக வழிபாட்டு இடமான குருந்தூர்மலையில் தடையை மீறி புராதன

15

## பொலிஸ் மா அதிபருக்கு எதிராக பேராயர் ரஞ்சித் எழுத்தாணை மனு!

கொழும்ப, ஜூலை 01

பொலிஸ் மா அதிபர் மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோருக்கு எதிராக பேராயர் கர்தினால் மல்கம் ஆண்டகை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் எழுத்தாணை மனுவை தாக்கல் செய்துள்ளார்.

15

## நாட்டின் பணவீக்கம் 50 வீதத்தை கடந்தது!

கொழும்பு, ஜூலை 01

நாட்டின் வரலாற்றில் முதன்முறையாக 50 வீதத்தை கடந்துள்ளது பணவீக்கம்.

கடந்த, ஜூன் மாதத்தில் நாட்டின் பணவீக்கம் 54.6வீதமாகப் பதிவானது. இந்தக் காலப்பகுதியில் உணவுப் பொருட்களின் விலை 80வீதமாக

15

# இலங்கைக்கு உதவுவோம்; சர்வதேச நாணய நிதியம்!

- ஒப்பந்தப் பேச்சுக்கள் தொடரும்
- பொதுக் கடனை நீடிக்க முடியாது!
- பொருளாதாரம் மேலும் சுருங்கும்

கொழும்பு, ஜூலை 01

எதிர்காலத்தில் விரிவாக்கப்பட்ட நிதி வசதி தொடர்பான ஊழியர் அளவிலான ஒப்பந்தத்தை எட்டுதல் தொடர்பான பேச்சுக்கள் தொடரும். இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான எங்களின் உறுதிப்பாட்டை நாம் தொடர்ந்து உறுதி செய்வோம் என்று சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள் குழு தெரிவித்துள்ளது.

15

## நேற்று நள்ளிரவு முதல் பஸ் கட்டணம் உயர்வு

### குறைந்த கட்டணம் 40 ரூபா

கொழும்பு, ஜூலை. 01

நேற்று நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் பஸ் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, ஆகக் குறைந்து பஸ் கட்டணம் 32 ரூபாவிலிருந்து 40 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ள அதேவேளை, ஏனைய கட்டணங்கள் 22 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

15



## அரசாங்கத்துக்கு எதிராக தலைநகரில் போராட்டம்!

கொழும்பு, ஜூலை 30

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தை பதவி விலகுமாறு வலியுறுத்தி தலைநகர் கொழும்பில் நேற்று போராட்டங்கள் இடம்பெற்றன.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் போராட்டம் கொழும்பு - புறக்கோட்டை புகை

15

## நீராட சென்ற இளைஞர் பலி!

கிளிநொச்சி, ஜூலை 01

கிளிநொச்சி - அம்பாள் குளத்தில் நீராட சென்ற இளைஞர் சடலமாக மீட்கப்பட்டார்.

நேற்று வியாழக்கிழமை மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், மாங்குளம் ஊற்றுப் புலத்தை சேர்ந்த ரகு என்ற 19 வயது இளைஞரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

அவரின் உடலம் பிரேத பரிசோதனைகளுக்காக கிளிநொச்சி பொது மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

(ஐ)

## 22ஆவது திருத்தச் சட்டம் வர்த்தமானியில் வெளியீடு

கொழும்பு, ஜூலை 01

அரசமைப்பின் 22ஆவது திருத்தச் சட்ட வரைவு வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ இந்த சட்ட வரைவை அமைச்சரவையில் பல தடவைகள் சமர்ப்பித்து இறுதியாக அங்கீகரிக்கப்பட்டது.

15

### உலக வங்கியின் உதவியுடன்

## 100,000 தொன் எரிவாயுவை வாங்குகின்றது 'லிற்றோ'

கொழும்பு, ஜூலை 01

ஒரு இலட்சம் மெற்றிக் தொன் எரிவாயுவை பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்தத்தில் நிதி அமைச்சின் கீழ் உள்ள லிற்றோ எரிவாயு நிறுவனம் நேற்று வியாழக்கிழமை கைச்சாத்திட்டுள்ளது.

இந்த கொள்வனவுக் கட்டளையின் மொத்த விலை 90 மில்லியன் அமெரிக்க டொலர்கள். இதில், 70 மில்லியன்

15

## இப்படியும் நடக்கிறது...!

சுற்றுலாப் பயணியாக ஸ்கொட்லந்துக்காரர் ஒருவர் அமெரிக்காவிற்கு வந்திருந்தார். அமெரிக்கர் ஒருவர் அவருக்குத் தன் நாட்டைச் சுற்றிக் காண்பித்துக் கொண்டிருந்தார்.

பெரிய மலைக் குகை ஒன்றை அவருக்கு காட்டிய அமெரிக்கர், இங்கிருந்து நாம் என்ன பேசினாலும் இந்த மலைக் குகையில் பட்டு சரியாக நான்கு நிமிடங்கள் கழித்து அப்படியே அது எதிரொலிக்கும் என்றார்.

பெருமையுடன் அவரைப் பார்த்த அமெரிக்கர், இதைப் போன்ற அற்புதம் எந்த நாட்டிலாவது உள்ளதா? என்று கேட்டார்.

அதற்கு ஸ்கொட்லாந்துக்காரர், எங்கள் நாட்டு மலைப் பகுதியில் நாங்கள் முகாம் இட்டிருந்தோம். இரவு பத்து மணி ஆயிற்று. நான் அங்கிருந்தவர்களிடம், நான் தூங்கப் போகிறேன், என்னைக் காலை ஆறு மணிக்கு எழுப்பி விடுங்கள் என்றேன்.

அவர்களில் ஒருவர், "யாரும் உங்களை எழுப்பவேண்டாம். பொழுது விடிந்துவிட்டது எழுந்திரு, என்று உரக்கக் குரல் கொடுத்துவிட்டுப் படுத்து விடுங்கள். எதிரொலி காலை ஆறு மணிக்கு உங்களை எழுப்பி விடும்" என்றார்.

அவர் சொன்னதை நான் நம்பவில்லை.

இருந்தாலும், "பொழுது விடிந்து விட்டது, எழுந்திரு" என்று உரக்கக் குரல் கொடுத்து விட்டுப் படுத்தேன். என்ன வியப்பு! சரியாக எட்டு மணி நேரம் கழித்து காலை ஆறு மணிக்கு அந்த எதிரொலி, "பொழுது விடிந்து விட்டது, எழுந்திரு" என்று என்னை எழுப்பியது என்றார்.

இந்தக் கதையை அந்த அமெரிக்கர் நம்பினாரா என்பது தெரியவில்லை.

பத்தாம் திகதிவரை எரிபொருளுக்காக வரிசையில் நிற்கவேண்டாம் என்று அந்தத் துறைசார்ந்த அமைச்சரான காஞ்சன விஜேயசேகர சில தினங்களுக்கு முன்னர் அறிவிப்பை விடுத்திருந்தார்.

பத்தாம் திகதி எரிபொருள் வந்துவிடும், அதற்காக அனாவசியமாக அதற்கு முன்னர் வரிசையில் நின்று உங்கள் நேரத்தை வீணடிக்காதீர்கள் என்பதற்காக அவர் அந்த அறிவிப்பை விடுத்ததாகவே நாம் கருதவேண்டியிருந்தது.

இந்த அறிவிப்பை விடுத்துவிட்டு அமைச்சர் மத்திய கிழக்கு நாடுகளுக்கு எரிபொருள் கேட்டு பயணமாகிவிட்டார்.

சிறுக சிறுகச் சேர்ந்துகொண்டிருக்கும் டொலர்கள் கொஞ்சம் எம்மிடம் இருந்தாலும் மத்திய கிழக்கில் வழக்கமாக எமக்கு எண்ணெயை விநியோகிக்கும் நிறுவனங்களிடம் மேற்கு நாடுகள் இப்போது புதிதாக எரிபொருளை வாங்கத் தொடங்கியிருப்பதால் அந்த நிறுவனங்கள் எமக்கு எரிபொருளை விற்பதற்கு அக்கறை காட்டவில்லை என்று ஓர் அமைச்சர் கவலை தெரிவித்திருந்ததை சில நாட்களுக்கு முன்னர் இந்தப் பத்தியில் தெரிவித்திருந்தேன்.

ஆனால், ஒரு பொருளை இறக்குமதி செய்வதெனில் அதற்காக முதலில் ஒரு வங்கியிடமிருந்து எல்.சி. (Letter of credit) பெற்று, அதனை ஏற்றுமதி செய்யும் நிறுவனத்திற்கு கொடுக்கவேண்டும். அவ்வாறு கொடுத்த பின்னனர், அவர்கள் அதற்குரிய பொருளை அனுப்பிவைப்பார்கள். அந்தப் பொருள் இலங்கையில் ஒரு துறைமுகத்தில் இறக்குமதி செய்யப்படுவதற்கு முன்னதாக அந்த எல்.சி.க்குரிய டொலர்களை அந்த வங்கி இந்த நிறுவனத்திற்கு செலுத்திவிடவேண்டும். இவ்வாறு செலுத்திய பின்னரே கப்பலிலிருந்து அந்தப் பொருளை இறக்கமுடியும்.

இப்போது பிரச்னை, எம்மிடம் டொலர் இருந்தாலும் அதனை வைத்துக்கொண்டு இலங்கையிலுள்ள ஒரு வங்கி கொடுக்கின்ற எல்.சி.யை ஏற்றுக்கொள்ள எந்த நிறுவனமும் தயாராக இல்லை. ஏற்கனவே கடன் செலுத்தாததால் வங்குரோத்தான நிலையில் இருக்கும் நாடு ஒன்றின் வங்கி - அதுவும் அந்த நாட்டு அரச வங்கி கொடுக்கின்ற எல்.சி.யை ஏற்றுக்கொள்ள எந்த நிறுவனமும் தயாராக இல்லை.

இதுவே இன்று எரிபொருளை கொண்டுவருவதில் உள்ள முக்கிய சிக்கல். நாட்டுக்கான டொலர் வருமானம் இந்த ஆண்டு தொடக்கத்தில் சற்று துளிர்விடத் தொடங்கியிருந்தது. சுற்றுலாப் பயணிகளின் வருகை அதற்கு சிறுதுளியாக தொடங்கியபோது, போராட்டங்கள் அவற்றைத் தடுத்தன. இப்போது, எரிபொருள் முற்றாக தீர்ந்துபோன நிலைமை என்று மீண்டும் சுற்றுலாத்துறை முடங்கிவிட்டது. வெளிநாட்டில் தொழில்புரியும் இலங்கையர்கள் அனுப்பும் சிறியதொகைப் பணமும், அங்கும் இங்குமாக நடக்கும் சிறிய சிறிய தொகை ஏற்றுமதியும் டொலர் வருமானத்துக்கு சிறிய பங்களிப்பு செய்து, அதன் மூலம் கையில் கொஞ்ச டொலர் இருந்தாலும் அதனைக்கொண்டு வாங்கமுடியாத நிலை.

இனி, மீண்டும் இந்தியாவோ, மத்திய கிழக்கு நாடுகளோ அல்லது சீனாவோ எரிபொருளை கடனாக கொடுத்தால் மாத்திரமே அது உடனடியாக வருவதற்கு சாத்தியமுண்டு. அல்லது, பிரதமர் ரணில் எதிர்பார்க்கும் சர்வதேச நாணய நிதிய கடன் தொகை ஆறு பில்லியனும் கிடைக்கவேண்டும். அதேவேளை இலங்கை, கடன்கொடுக்கக்கூடிய நாடு என்று அது அங்கீகரிக்கவும் வேண்டும்.

இவை எல்லாம் நடந்தால்தான், எரிபொருள் விற்பனை நிலையங்களில் பெற்றோலும் டீசலும் ஆறாக ஓடும். இல்லையெனில், இன்றைய நிலைமைதான் தொடர்ந்து ஓடப்போகின்றது.

இந்த லட்சணத்தில், நமது அரசிலுள்ள அரசியல்வாதிகள், குழந்தைகளுக்கு தாய்மார் நிலாக்காட்டியதுபோல, கப்பல்களைக் காட்டிக்கொண்டிருக்க வேண்டியதுதான்.

பத்தாம் திகதி கப்பல் வந்துவிட்ட பின்னர் எரிபொருளுக்கு பிரச்னையே இருக்காது என்று அமைச்சர் ஹரின் சொல்ல, அடுத்த வாரத்திலிருந்து எரிபொருளுக்கு கியூவே இருக்காது என்று முன்னாள் அமைச்சர் மகிந்தானந்தா சொல்ல, இருபத்திஇரண்டாம் திகதி தான் அடுத்த கப்பல் வரும் என்று பிரதமர் ரணில் சொல்ல, மேலேயுள்ள கதையில் ஸ்கொட்லாந்துக்காரரின் கதையை அமெரிக்கர் கேட்டுக் கொண்டிருந்ததுபோல, நாமும் கேட்டுக்கொண்டிருக்க வேண்டியதுதான்!

**- ஊர்க்குருவி**

# திருக்கோணேஸ்வரத்தையும் இந்திய அரசு காக்கவேண்டும்!

## இந்திய பிரதமருக்கு ஆறு. திருமுருகன் கடிதம்

*யாழ்ப்பாணம், ஜூலை 01*

"திருக்கேதீச்சர ஆலய புனரமைப்புப் பணிபோல் திருகோணமலை திருகோணேஸ்வரர் ஆலயத்தையும் இந்திய அரசு பொறுப்பெடுத்து திருப்பணிகளை நிறைவேற்றிக் காக்க வேண்டும்" என்று செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திரு முருகன் இந்திய அரசிடம் வேண்டுகோள் முன்வைத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் இந்தியப் பிரதமருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். அதிலேயே மேற்படி கோரிக்கையை அவர் விடுத்தார்.

மேலும், இலங்கை வாழ் சைவ மக்களின் பெருங்கோவில்களுள் ஒன்றாக விளங்குகின்ற திருக்கேதீச்சரத்தை இந்திய அரசாங்கம் சுமார் 350 மில்லியன் ரூபாய் செலவில் கருங்கல் கோவிலாக அமைத்துச் சிறப்பித்துள்ளமை நன்றிக்குரிய விடயமாகும்.

இந்தக்கோயிலின் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 6ஆம் திகதி நடைபெறுவது உலகம் முழுவதும் வாழும் சைவமக்களுக்கு பெருமைதரும் விடயமாக உள்ளது. சரித்திரப் பிரசித்தி பெற்ற திருக்கேதீச்சரத்தை புனரமைத்ததுபோல் சரித்திரப் பெருமை கொண்ட திருகோணமலை திருக்கோணேஸ்வரத்தையும் இந்திய அரசு பொறுப்பெடுத்து நன்முறையில் ஆலயத் திருப்பணிகளை நிறைவேற்றித் தரவேண்டும். திருக்கோணேஸ்வர ஆலயத்தில் திருப்பணி வேலைகளைச் செய்வதில் இலங்கைத் தொல்லியல் திணைக்களம் திட்டமிட்டு தடுத்து வருவதை பலரும் அறிவர்.

திருக்கேணேஸ்வரர் ஆலய கோபுரத் திருப்பணி, அன்னதான மண்டபத் திருப்பணி, தேரோடும் வீதி அமைப்பு யாவும் பல வருடங்களாகத் தடைபட்டுப் போயுள்ளன.

இந்த நாட்டின் மீது படையெடுத்த போர்த்துக்கேயரால் 1510இல் கோணேஸ்வரர் கோவில் முற்றாக அழிக்கப்பட்டது. இன்றுவரை அந்த ஆலயம் முழுமையாக கட்டி முடிக்கப்படவில்லை.

இந்திய நாட்டுடன் மிக நெருங்கிய வரலாறு கொண்டது திருக்கோணமலை. இராமாயண காலத்து திருக்கோயில் என்பது யாவரும் அறிந்ததே இந்தியப் பிரதமர் திருக்கோணேஸ்வர ஆலய திருப்பணியில் அக்கறை கொண்டு ஆலயத்தை புனர்நிர்மானம் செய்து உதவுமாறு இலங்கை வாழ் சைவ மக்கள் சார்பில் மிகுந்த நன்றியோடு வேண்டுகின்றோம் - என்றுள்ளது.

## இறக்குமதியாகும் பொருட்களை விநியோகிப்பதில் பெரும் சிக்கல்!

*கொழும்பு, ஜூலை 01*

இறக்குமதி செய்யப்படும் பொருட்களை விநியோகிப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக இலங்கை கொள்கலன் போக்குவரத்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளபோதிலும், எரிபொருள் தட்டுப்பாடு காரணமாகவே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

எரிபொருளை பெற்றுக் கொள்வதற்கான முறையான பொறிமுறை இல்லாததே இந்த பிரச்னைக்கு பிரதான காரணம் என அகில இலங்கை கொள்கலன் போக்குவரத்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சனத் மஞ்சுள தெரிவித்தார். (அ)

## கொலன்னாவ முனையத்திலிருந்து அரச அதிகாரிகளுக்கு எரிபொருள்?

*கொழும்பு, ஜூலை 01*

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கொலன்னாவ முனையத்துக்கு நேற்று முன்தினம் ஏராளமான சொகுசு வாகனங்கள் வந்து சென்றதாகக் கூறப்படுகின்றது.

அரச உயர்மட்ட உத்தரவுக்கமைய அங்கு எரிபொருள் விநியோகம் இடம்பெறுவதாக உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

நாடு முழுவதும் மக்கள் எரிபொருளுக்காக வரிசையில் காத்திருக்கையில், அரசுடன் தொடர்புடையவர்கள் தமது சொகுசு வாகனங்களில் எரிபொருள் நிரப்பிக் கொண்டு செல்வது மக்களை மேலும் அதிருப்திக்குள்ளாக்கியுள்ளது. (அ)

## எரிபொருள் வழங்குமாறு கேட்டு சமுர்த்தி ஊழியர்கள் போராட்டம்!

*வடமராட்சி, ஜூலை 01*

தமக்கு எரிபொருள் வழங்கக் கோரி வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலக சமுர்த்தி உத்தியோகத்தர்கள் வடமராட்சி வடக்கு பிரதேச செயலகம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடமராட்சி நேற்றுமுன்தினம் சுகயீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபட்ட அவர்கள், நேற்று வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்திற்கு முன்பாக கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அத்துடன், எரிபொருளை பெற்றுத் தராவிடில் உலக வங்கியின் ரூபாய் 5,000 கொடுப்பனவை வழங்கிவதிலிருந்து விலக நேரிடும், அத்தியாவசிய சேவையில் உள்ளடக்கப்பட்டுள்ள தமக்கு எரிபொருளை பிரதேச செயலர் பெற்றுத்தர வேண்டும், அரசாங்கத்தால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் தற்போதைய உதவி திட்டங்களை நடைமுறைப்படுத்த - கண்காணிக்க எரிபொருளை பெற்றுத்தர வேண்டும் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடமராட்சி வடக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட வல்வெட்டித்துறை சமுர்தி வங்கி கள பணியாளர்கள், பருத்தித்துறை சமுர்த்தி கள பணியாளர்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர். (ஐ-2)

## தெய்வீக திருக்கூட்டம் கொக்குவிலில் இன்று!

*யாழ்ப்பாணம், ஜூலை 01*

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் - இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணை மற்றும் ஏற்பாட்டில் அகில இலங்கை இந்து மாமன்றத்தின் இணை அனுசரணையுடன் முன்னெடுத்து வரும் தெய்வீகத் திருக்கூட்டத் தொடரின் 8ஆவது நிகழ்வு, இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு நல்லை ஆதின கலா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கொக்குவில், தலையாழி ஞானவைரவர் அறநெறிப் பாடசாலையின் ஏற்பாட்டில் நடக்கும் இந்த நிகழ்வில், நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் இரண்டாவது குருமகா சந்நிதானம் வண. ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள், வண. ஆன்மிகச்சுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள் திருமுன்னிலையில், ஜப்பான் - கக்சுயின் பல்கலைக்கழக ஓய்வுநிலை ஆய்வுப் பேராசிரியர் முனைவர் ச. மனோன்மணி தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

ஆசிரிரைகளை தொடர்ந்து, தலையாழி ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் அதனைத் தொடர்ந்து நிகழ்வின் தலைவர் முனைவர் ச. மனோன்மணியின் தலைமையுரையும் அதனைத் தொடர்ந்து 'ஆர்கொலோ சதுரர்' என்னும் விடயத் தலைப்பில், ஆன்மிகப் பிரசாரகரும் யாழ். பல்கலைக்கழக மாணவனுமான கலா மோகன் பிரகானின் பேச்சும் இடம்பெறவுள்ளன.

சிறப்பு நிகழ்வாக, யாழ். பல்கலைக்கழக, இந்துக் கற்கைகள் பீட, இந்துநாகரிகத்துறை, சிரேஷ்ட விரிவுரையாளர் சி. ரமணராஜாவின் 'சமூக வழிகாட்டலில் ஆறுமுகநாவலர்' என்னும் தொனிப்பொருளில் சிறப்புரை நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

நிகழ்வின் நிறைவில் மாணவர்களுக்கான பாராட்டுப் பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் நடைபெறும். (ஐ)

ஈழநாடு
Eelanadu
01.07.2022 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், ஆனி 17

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# பௌத்த பீடங்களின் கையறுநிலை?

இலங்கையின் செல்வாக்கு மிக்க பௌத்த பீடங்களில் முதன்மையானதாகக் கருதப்படும், கண்டி, அஸ்கிரிய பீடத்தின் பீடாதிபதி, வரகொட ஞானரத்தின தேரர், இலங்கையை கடவுள்தான் காப்பாற்ற வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கின்றார். தங்களின் எச்சரிக்கைகளை ஆட்சியாளர்கள் பொருட்படுத்தவில்லை - இதன் காரணமாகவே இவ்வாறானதொரு நெருக்கடி நிலைமை ஏற்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்திருக்கின்றார். இப்போது கேள்வி - எந்தக் கடவுள் என்பதுதான்? மேற்குலகத்தின் கிறிஸ்தவ கடவுளா அல்லது இந்தியாவின் இந்து கடவுளா?

விடுதலைப் புலிகளை வீழ்த்தியமை தொடர்பில் பாற்சோறு பரிமாறியவர்களே, இப்போது, சிங்களவர்களை கடவுகள்தான் காப்பாற்ற வேண்டுமென்று கூறும் நிலைமைக்கு கீழறங்கியிருக்கின்றனர். யுத்த வெற்றிவாதத்தின் மோசமான தோல்விதான் இவ்வாறானதொரு நிலைமைக்கு காரணமென்னும் உண்மையை இப்போதாவது பௌத்த மதபீடங்களால் உணர முடிகின்றதா என்பதை அறிய முடியவில்லை. யுத்த வெற்றிவாதத்தை காண்பித்துத்தான், ராஜபக்ஷக்கள், சிங்கள பௌத்த பீடங்களையும் பெரும்பான்மையான சிங்கள மக்களையும் தங்கள் வசப்படுத்தினர். அதிகாரங்களை தங்கள் குடும்பத்தை நோக்கி குவித்திருந்தனர். ராஜபக்ஷக்களின் இயலாமையை கண்டதன் பின்னர்தான், பௌத்த பீடம், கடவுள் வாதத்தில் தஞ்சமடைகின்றது.

சிங்கள ஆளும் வர்க்கத்தின் அரசியலும் பௌத்த மதபீடங்களின் செல்வாக்கும் பிரிக்க முடியாதவை. 1957இல் எழுதப்பட்ட விகாரைக்குள் புரட்சி என்னும் நூலுடன் ஆரம்பிக்கின்றது பௌத்த பீடங்களின் அரசியல் செல்வாக்கு. இலங்கைத் தீவானது, சிங்களவர்களுக்கான தீவாக மட்டுமே பேணிப் பாதுகாப்பதுதான் விகாரைப் புரட்சியின் இலக்கு. இந்த இலக்கையே, இலங்கையை மாறி, மாறி ஆட்சி செய்யும் சிங்கள கட்சிகள் முன்னெடுத்து வந்திருக்கின்றன. இதுதான் இதுவரையான இலங்கைத் தீவின் வரலாறு.

இந்த காவியரசியல் மேலாதிக்கம் இலங்கைத் தீவை முன்நோக்கி நகர்த்துவதில் எந்தவொரு பங்களிப்பையும் இதுவரையில் வழங்கவில்லை என்பதுதான் கசப்பான உண்மையாகும். எனினும், இந்த காவிகளின் ஆதிக்கத்தை முறியடித்துக் கொண்டு, பயணிக்கும் துணிவுள்ள எந்தவொரு சிங்கள தலைவரையும் இதுவரை இலங்கைத் தீவு காணவில்லை.

அமெரிக்காவின் மிலேனியம் ஒத்துழைப்பு திட்டத்தை எதிர்த்து பிரசாரம் செய்தபோது, அஸ்கிரிய பீடம் என்ன ஆலோசனையை வழங்கியிருந்தது? மனித உரிமைகள் விவகாரத்தில் முன்னேற்றங்களை காண்பிக்க வேண்டுமென்று அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகள் வலியுறுத்தி வருகின்றன - ஆனால், ராஜபக்ஷக்களோ அவற்றை புறம்தள்ளி செயல்பட்டனர். இதன் போது, ராஜபக்ஷகளுக்கு அஸ்கிரிய பீடம் என்ன ஆலோசனைகளை வழங்கியிருந்தது? ஆட்சியாளர்கள் இந்திய, மேற்குல எதிர்ப்பை மௌனமாக அங்கீகரிக்கும் செயல்பாடுகளையே பௌத்த மதபீடங்கள் முன்னெடுத்து வந்திருக்கின்றன. சிங்கள - பௌத்த தேசியவாதிகளின் மேலாதிக்க நடவடிக்கைகளை பௌத்த மதபீடங்கள் ஒரு போதுமே விமர்சித்ததில்லை. தமிழ் மக்கள் செறிவாக வாழும் பகுதிகளில் - பௌத்தர்களே இல்லாத இடங்களில் புத்தர் சிலைகளை நிறுவி, புத்தரின் போதனைகளுக்கு மாறாக சிங்கள மேலாதிக்கவாதிகள் செயல்படுகின்ற போதெல்லாம், அஸ்கிரிய பீடம், என்ன செய்து கொண்டிருந்தது?

ஆழமாக நோக்கினால், இலங்கைத் தீவு இவ்வாறானதொரு நெருக்கடிக்குள் சிக்கியிருப்பதற்கு முதல் காரணம் - பௌத்த மதபீடங்களேயாகும். இனவாத அரசியல்வாதிகள், தொடர்ந்தும் இனவாதத்தில் திருப்தி கொண்டமைக்கு பின்னால் பௌத்த மத பீடங்களின் ஆசீர்வாதமே இருந்திருக்கின்றது. இந்த அடிப்படையில் சிந்தித்தால், இலங்கைத் தீவின் இன்றைய நிலைக்கு ஆட்சியாளர்கள் எந்தளவு பொறுப்போ, அந்தளவுக்கு பௌத்த மதபீடங்களும் பொறுப்பாகும். மனிதன் செய்த தவறுகளுக்கு மனிதன்தான் பரிகாரம் தேட வேண்டும். கடவுளல்ல. சிங்கள-பௌத்த மேலாதிக்கவாதிகள் புரிந்த தவறுகளை உணர்ந்து, அவற்றை சரிசெய்வது தொடர்பில் சிந்தித்தால் மட்டுமே நாட்டுக்கு விமோசனமுண்டு.

# சர்வ கட்சி அரசு !

அலசுவது இராஜதந்திரி



*இலங்கை தேசிய சமாதான பேரவை அமைப்பாளரான கலாநிதி ஜெகான் பெரேரா நாட்டின் இன்றைய பொருளாதார நெருக்கடி நிலையை எதிர் கொள்வதற்கு ஒரு சர்வ கட்சி ஆட்சி முறையே உகந்ததாக இருக்க முடியும் என்று கருத்து வெளியிட்டுள்ளார்.*

*ஏற்கனவே, ஒரு கலப்பு ஆட்சிமுறையே நாட்டில் நிலவுவது போன்ற தன்மை காணப்படுகின்றது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொதுஜன ஐக்கிய முன்னணியைச் சேர்ந்தவராகவும் பிரதமராக ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த ரணில் விக்கிரமசிங்கவும் இருந்து வருகின்றனர். நாட்டைக் காப்பாற்றும் நோக்கிலேயே தாம் ஆளும் தரப்பினருடன் இணைந்தாரெனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூறிவருகின்றார். ஆனால், பொருளாதார நெருக்கடி கடந்த மே மாதம் ஆரம்பித்ததும் ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களின் பின்புலத்தோடு ஓர் ஆட்சி மாற்றத்தைக்கூட ஏற்படுத்த முன்வருவார் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், ஆளும் தரப்பினர் ரணில் விக்கிரமசிங்க தமக்கு ஒரு தலையிடியாக இருக்கக்கூடாதென்பதில் குறியாக இருந்ததோடு தம் பக்கம் அவரை வைத்துக்கொள்வதில் வெற்றிகண்டுள்ளனர். இதன்மூலம் நாட்டின் இன்றைய நெருக்கடிக்கு எதிர்தரப்பினரும் அரசுடன் இணைந்து செயல்பட முன்வந்துள்ளனர் என்ற அபிப்பிராயத்தை நாட்டு மக்களிடையே ஏற்படுத்துவதைவிட சர்வதேச மட்டத்தில் ஏற்படுத்தி உதவிகளைப் பெறுவதே கோட்டாபய அரசின் கபட நோக்கமாக இருந்தது. இதற்கு ரணில் விக்கிரமசிங்கவும் "பொறியில் அகப்பட்ட எலி"யைப்போல இரையாகி தனது தலையில் தானே மண்ணை வாரிப்போட்டுக் கொண்டுள்ளார். ஏனெனில், நாட்டின் நலிவடைந்துள்ள பொருளாதார நிலையை தமது நடவடிக்கைகள் மூலமாகக் கூட நிமிர்த்தி விட முடியாதென ரணில் விக்கிரமசிங்க தற்போது உணர்ந்துள்ளதையே அறிந்து கொள்ள முடிகின்றது.*

*இத்தகைய நிலையில் ஒரு சர்வகட்சி அரசின் மூலமாகவே தீர்வைக் காண முடியும் என்று இலங்கை தேசிய சமாதானப் பேரவை தலைவரும் அரசியல் விமர்சகருமான கலாநிதி ஜெகான் பெரேரா கூறியுள்ளார்.*

*இருந்தபோதிலும் ஒரு சர்வகட்சி கட்டமைப்பில் ஏற்படுத்தப்படுகின்ற ஆட்சிமுறை நேர்த்தியான பொருளாதார நிலவரத்துக்கு வழிவகுக்குமா? என்பது முக்கிய கேள்வியாக இருக்கின்றது. ஏனெனில், இன்றைய அரசில் அங்கம் வகிப்பவர்களாக இருக்கலாம். அல்லது எதிர்தரப்பில் வேறு கட்சிகளில் இருப்போராக இருக்கலாம். ஆனால், நாட்டை மீளவும் பொருளாதார ரீதியாக கட்டி எழுப்பக்கூடிய வல்லமை கொண்டவர்களாக எவராவது எந்த ஒரு கட்சியிலாவது இருக்கிறார்களா? என்பதே மற்றுமொரு கேள்வியாக இருக்கின்றது.*

*எனவே, சர்வகட்சி ஆட்சி முறையிலான ஓர் அரசாங்கம் என்பதுகூட அரசியல் ரீதியாக இன்றைய ஆட்சியாளரையும் அவர் சார்ந்தோரையும் பலப்படுத்துவதாக இருக்க முடியுமே தவிர சிதைவுற்றுள்ள பொருளாதாரத்தை உறுதியாக கட்டி எழுப்புமா? என்பது சந்தேகமே.*


*ஒரு நாட்டில் இயற்கை அனர்த்தம், யுத்தம், இயற்கை வளங்களின் பற்றாக்குறை, நோய் பிணி என்பவற்றால் பொருளாதார நெருக்கடிகள் ஏற்படுவது வழக்கமாகும். ஆனால், இலங்கையைப் பொறுத்தவரை தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு ஊழல், மோசடி , குடும்ப ஆட்சி என்பவையே முக்கிய காரணங்களாக இருக்கின்றன.*

*இலங்கையில் இன்றிருப்பது போல பொருளாதார நெருக்கடி ஏற்படுவதாயின் மூன்று தசாப்த காலமாக இடம்பெற்ற யுத்த காலத்தின்போது அந்த நெருக்கடி ஏற்பட்டிருக்க வேண்டும். ஏனெனில், அக்காலத்திலேயே யுத்த செலவீனங்களுக்காக பெருமளவு பணம் செலவாகியிருந்தது. ஆனால், அன்று யுத்தத்துக்கு பெருமளவு பணம் செலவிடப்பட்ட போதிலும் நாட்டு மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்குமளவுக்கு இன்று போல நிலமை மோசமடைந்திருக்கவில்லை.*

*நாட்டில் ராஜபக்ஷ தரப்பினர் குடும்ப ஆட்சி மூலம் தமது சந்ததியினருக்கு 300 வருடங்களுக்கு தேவையானளவு பணத்தை நாட்டின் அனைத்து வளங்கள் மூலமாகவும் சுரண்டியுள்ளனர் என்று முன்னாள் அமைச்சரான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.*

*இத்தகைய பின்னணியில் அரசியல் விமர்சகர் கலாநிதி ஜெகான் பெரேரா குறிப்பிடுகின்ற சர்வகட்சி அரசு என்பதுகூட நலிவடைந்துள்ள பொருளாதாரத்தை காத்திரமாக்கும் என்று கருதுவதற்கு இல்லை. ஏனெனில், அனைத்துக் கட்சிகளிலும் அங்கம் வகிப்போர் தூரநோக்கற்ற அரசியல் அல்லது பொருளாதார சிந்தனையற்ற குதர்க்கப் பேர்வழிகளாக இருக்கிறார்கள் என்பதையே அறியக் கூடியதாக இருக்கின்றது.*

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
தேவைக்கேற்ற வருவாய் வந்து சேரும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.புதிய முயற்சிகள் பலன் தரும். உங்களின் எண்ணம் நிறைவேறும். உங்களது முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.

**இடபம்**
உங்கள் செல்வாக்கு உயரும்.எதிர்பார்த்த பணம் வந்து சேரும். வீடு, வாகனம் வாங்கும் முயற்சி பலிதமாகும். குல தெய்வ அருளால் உங்கள் செயல்களில் வெற்றி உண்டாகும்.

**மிதுனம்**
குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்னைகள் சரியாகும். மனக்குழப்பம் விலகும். எதிர்பாராத செலவு தோன்றும். பணத்தேவை அதிகரித்து உங்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தும். மன நிம்மதி பாதிக்கும்.

**கடகம்**
எதிர்பார்த்த செய்தி வரும். உங்களது முயற்சியால் நினைத்ததை அடைவீர்கள்.வெளி வட்டாரத்தில் செல்வாக்கு உயரும். ஓய்வின்றி உழைப்பீர்கள். வேலைக்காக மேற்கொண்ட முயற்சி வெற்றியாகும்.

**சிம்மம்**
பண வரவு உண்டாகும். எதிர்பார்த்த செய்தி வரும். தொழிலில் புதிய அணுகுமுறையை செயல்படுத்தி லாபம் காண்பீர்கள். பழைய முதலீடுகளில் இருந்து வருவாய் வந்து சேரும். குடும்ப பிரச்னை தீரும்.

**கன்னி**
வியாபாரத்தில் ஏற்பட்ட போட்டிகளை சமாளித்து வெற்றி அடைவீர்கள்.உங்களின் முயற்சி நண்பர்களின் ஆதரவுடன் வெற்றியாகும். லாபம் அதிகரிக்கும். போட்டிகளை சமாளித்து வெற்றி அடைவீர்கள்.

**துலாம்**
நண்பர்களாலும் உங்களைப் புரிந்து கொள்ள முடியாமல் போகும். நெருக்கடியான நாள்.கொடுக்கல் வாங்கலில் பிரச்னைகளை சந்திப்பீர்கள். மனச்சோர்வு அதிகரிக்கும். முயற்சிகள் இழுபறியாகும்.

**விருட்சிகம்**
யாரிடமும் வீண் விவாதம் செய்ய வேண்டாம். பணியிடத்தில் உங்களை சிலர் சீண்டிப் பார்ப்பார்கள். அமைதி காப்பது நல்லது. கடவுள் வழிபாடு இன்னலை அகற்றும். வேலையில் கவனம் தேவை.

**தனுசு**
உங்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மகிழ்ச்சியான நாள். பணியாளர்கள் தாங்கள் விரும்பிய இட மாற்றத்தை அடைவார்கள். தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு எண்ணியதை நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்**
நீண்ட நாள் பிரச்னை தீரும். பயணத்தினால் பலன் காண்பீர்கள். குடும்ப பிரச்னை ஒன்று முடிவிற்கு வரும்.வருவாயில் ஏற்பட்ட தடைகள் விலகும். முயற்சியில் வெற்றி அடைவீர்கள்.

**கும்பம்**
நம்பிக்கையுடன் செயல்படுவீர்கள். உங்களின் செல்வாக்கு உயரும் நாள். தொழிலில் ஏற்பட்டிருந்த தடைகளை சரி செய்வீர்கள். குடும்பத்தினர் உதவி செய்வர்.திருப்பங்கள் நிறைந்த நாள்.

**மீனம்**
அந்நியர்களின் ஆதரவுடன் ஆதாயம் காண்பீர்கள். வாகனம் வாங்கும் முயற்சி பலிதமாகும். பிறரால் மகிழ்ச்சிக்குரிய சம்பவம் ஒன்று நடைபெறும். உங்கள் எண்ணம் ஈடேறும் நாள். யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள்.

*நளினி விடுதலை கோரும் வழக்கு;*

# தமிழக அரசு முன்வைக்காத வாதங்களை நீக்க உத்தரவு!

*சென்னை, ஜூலை 01*

ஆளுநரின் ஒப்புதல் இல்லாமல் தன்னை விடுதலை செய்யக் கோரி நளினி தாக்கல் செய்த வழக்கின் தீர்ப்பிலிருந்து, "ராஜீவ் கொலை வழக்கு ஆயுள் கைதிகளை விடுதலை செய்வது தொடர்பான தீர்மானத்தை ஆளுநர், குடியரசுத் தலைவருக்கு அனுப்பியது சரி" என அரசு வாதிட்டதாக பதிவு செய்யப்பட்ட கருத்துகளை நீக்கி சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற 7 பேரையும் விடுதலை செய்ய அ. தி. மு. க., ஆட்சிக் காலத்தில் அமைச்சரவையில் தீர்மானம் இயற்றி, அதை ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்டது. ஆனால், ஆளுநர் ஒப்புதல் அளிக்க காலதாமதம் செய்தார். இதையடுத்து, ஆளுநர் ஒப்புதல் இல்லாமல் தன்னை விடுதலை செய்ய வேண்டும் என்று நளினி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை தள்ளுபடி செய்து கடந்த 17ஆம் திகதி தலைமை நீதிபதி முனீஷ்வர்நாத் பண்டாரி, நீதிபதி என். மாலா ஆகியோர் அடங்கிய அமர்வு தீர்ப்பளித்தது. அந்தத் தீர்ப்பில், தமிழக அரசு தரப்பில் தெரிவிக்காத கருத்துகள் மற்றும் வாதங்கள் இடம்பெற்றுள்ளன எனவும், அந்தப் பகுதியை நீக்க வேண்டும் என்று உள்துறை இணைசெயலாளர் மனு தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில், "நளினியை விடுதலை செய்ய வேண்டும் என்ற அமைச்சரவை தீர்மானத்தை குடியரசுத் தலைவருக்கு ஆளுநர் அனுப்பி வைத்தது சரி"என்று தலைமை வழக்கறிஞர் தன் வாதத்தில் கூறினாரெனத் தீர்ப்பில் உள்ளது. ஆனால், அவர் அப்படி எதுவும் கூறவில்லை.

மேலும், அமைச்சரவை தீர்மானத்துக்கு ஒப்புதல் அளித்து, ஆளுநரோ அல்லது குடியரசுத் தலைவரோ கையெழுத்திடவில்லை என்றால், நளினியை முன்கூட்டியே விடுதலை செய்ய முடியாது என்று தலைமை வழக்கறிஞர் கூறினாரெனத் தீர்ப்பில் உள்ளது. இந்தக் கருத்தையும் அவர் தெரிவிக்கவில்லை. எனவே, நளினி வழக்கு மீதான தீர்ப்பை திருத்த வேண்டும். தலைமை வழக்கறிஞர் கூறாத வாதங்களை தீர்ப்பில் இருந்து நீக்க வேண்டும்" எனக் கோரப்பட்டிருந்தது.

இதையடுத்து, நேற்று இந்த வாதங்களின் கருத்துக்களை தீர்ப்பில் திருத்த உத்தரவிடப்பட்டது.

(ஐ)

## உள்ளாட்சி இடை தேர்தலை புறக்கணித்தது அ.தி.மு.க.!

*சென்னை, ஜூலை 01*

இரட்டை இலை சின்னம் கிடைப்பதில் ஏற்பட்டுள்ள சிக்கல் காரணமாக உள்ளாட்சி இடைத் தேர்தலை அ. தி. மு. க. கட்சி புறக்கணித்துள்ளது.

தமிழகத்தில் வறிதாகியுள்ள உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஜூலை 9ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என்று மாநில தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இதன்படி, மொத்தம் 510 பதவிகளுக்கு தேர்தல் நடைபெறுகிறது. இந்தப் பதவிகளுக்கான வேட்பு மனு தாக்கல் கடந்த 20 ஆம் திகதி தொடங்கி 27 ஆம் திகதி நிறைவு பெற்றது. வேட்புமனுக்களை திரும்பப் பெறும் கடைசி நாள் நேற்றாகும்.

510 பதவிகளில் 34 பதவிகளுக்கு கட்சி அடிப்படையில் தேர்தல் நடைபெறவுள்ளது. அ. தி. மு. கவில் எழுந்துள்ள ஒற்றைத் தலைமை விவகாரத்தால் கட்சி வேட்பாளர்களை அங்கீகரித்து படிவம் ஏ மற்றும் படிவம் பி ஆகியவற்றில் கையொப்பமிடுவதில் ஒருங்கிணைப்பாளர்களுக்கு இடையே கருத்து வேறுபாடு தொடர்கிறது.

நேற்று வரை அ. தி. மு. கவினர் விண்ணப்பங்களை சமர்ப்பிக்காததால் அவர்களுக்கு இரட்டை இலை சின்னத்தை ஒதுக்க முடியாது போனது. இதனால், உள்ளாட்சி தேர்தலை அ. தி. மு. க. கட்சி புறக்கணித்துள்ளது.

எனினும், இந்தக் கட்சியில் போட்டியிட பதிவு செய்தவர்கள் சுயேச்சைகளாகத் தேர்தலில் களமிறங்க முடியும் - என்பது குறிப்பிடத்தக்கது.

## அ.தி.மு.க. பொது கூட்டத்துக்கு தடை விதிக்க நீதிமன்று மறுப்பு

*சென்னை, ஜூலை 01*

எதிர்வரும் 11ஆம் திகதி நடைபெறவிருந்த அ. தி. மு. க. பொதுக்குழுவுக்கு தடை விதிக்கக் கோரிய வழக்கை விசாரிக்க சென்னை உயர்நீதிமன்றம் மறுப்பு தெரிவித்துள்ளது.

அ. தி. மு. க. பொதுக்குழு கூட்டம் ஜூன் 23ஆம் திகதி சென்னையில் நடைபெற்றது. முன்னதாக, "ஒப்புதல் அளிக்கப்பட்ட தீர்மானத்தைத் தவிர புதிய தீர்மானம் நிறைவேற்ற தடை விதிக்க வேண்டும்" என்று கோரி வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, அ. தி. மு. க. பொதுக்குழு கூட்டம் நடத்தத் தடையில்லை என்றும், திட்டமிட்டபடி பொதுக்குழு கூட்டத்தை நடத்தலாம் என்றும் அனுமதி அளித்து உத்தரவிட்டார்.

இதன்படி, எதிர்வரும் 11ஆம் திகதி காலை 9.15 மணியளவில் இதேபோல சிறப்புப் பொதுக்குழு கூட்டம் நடைபெறும் என்று அவைத் தலைவர் தமிழ்மகன் உசேன் அறிவித்துள்ளார்.

இதேவேளை, ஓ. பன்னீர் செல்வம் தாக்கல் செய்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கை மட்டும் எதிர்வரும் 4 ஆம் திகதி விசாரிக்க உயர்நீதிமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது.

## எனக்கு இனி ஏன் விளம்பரம்? முதல்வர் ஸ்ராலின் கேள்வி!

*சென்னை, ஜூலை 01*

ஐம்பது ஆண்டுகளுக்கும் மேல் அரசியலில் உள்ள எனக்கு இனி ஏன் விளம்பரம் என்று தமிழக முதல்வர் மு. க. ஸ்ராலின் கேள்வி எழுப்பியுள்ளார்.

ராணிப்பேட்டையில் நேற்று நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அங்கு உரையாற்றிய அவர், 50 ஆண்டுகளுக்கும் மேல் அரசியலில் உள்ள எனக்கு இனி ஏன் விளம்பரம் என்று கேள்வி எழுப்பினார். அதாவது, எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுக்கு முதல்வர் மு. க. ஸ்ராலின் விளக்கம் அளிக்கும் வகையில் அவ்வாறு கூறினார்.

நரிக்குறவர் வீட்டுக்குச் சென்று விளம்பரம் தேடிக் கொள்வதாக எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டியிருந்ததற்கு பதிலளித்த ஸ்ராலின், நரிக்குறவர் இன மக்களுக்கு தி. மு. க. அரசு பல்வேறு நலத் திட்ட உதவிகளை வழங்கி வருகிறது. கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேல் அரசியலில் உள்ள எனக்கு இனி ஏன் விளம்பரம்.

தி. மு. க. அரசு ஆட்சிக்கு வந்த போது, முன்னாள் முதல்வர்களின் புகைப்படங்கள் அச்சிடப்பட்ட பள்ளி புத்தகப் பைகள் வழங்கப்படாமல் இருந்தன. அவற்றை அளிக்க வேண்டாம் என்று கூறினார்கள். ஆனால், அவற்றை பயன்படுத்தாமல் போனால் 17 கோடி ரூபாய் அரசுக்கு வீண் செலவு ஏற்படும். பணம் வீணாகும். பரவாயில்லை முன்னாள் முதல்வர்களின் படங்களுடனே பைகளை வழங்கலாம் என்று கூறினேன். இது பற்றி தமிழக மக்கள் நன்கு அறிவார்கள். விளம்பரம் எனக்குத் தேவையில்லை. விளிம்பு நிலை மக்களுக்குத் தேவையான அனைத்தையும் தமிழக அரசு செய்து வருகிறது - என்றார்.

(ஐ)



# ஒட்டமாவடி எரிபொருள் நிலையத்தில் மோசடி!

## மக்கள் போராட்டத்தின் பின் தீர்வு

மட்டக்களப்பு, ஜூலை 01

ஓட்டமாவடி பலநோக்கு கூட்டுறவுச் சங்க எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் விநியோகத்தில் மோசடி இடம் பெறுவதாக தெரிவித்து நடத் தப்பட்ட மக்கள் போராட்டம் நேற்று வியாழக்கிழமை அதி காரிகளின் தலையீட்டின் பின்னர் முடிவுக்கு வந்தது.

இங்கு பொது மக்களுக்கு பெற்றோல் விநியோகம் இடம் பெறவில்லை. எரிபொருள் நிரப்பு நிலையத்தில் ஊழல் இடம் பெறுவதுடன் தொடர்ந்து இரவு நேரங்களில் தனிப்பட்ட வர்களுக்கு எரிபொருள் வழங்கப் படுகின்றது என்று கூறி அங்கு ஒன்றுகூடிய பொது மக்கள் ஆர்ப் பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அவ் விடத்திற்கு வருகை தந்த வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர்ப்பாட்டக்காரர்களுடன் கலந்துரையாடியபோது எரி பொருள் நிலையத்தில் உள்ள இருப்பை மக்களுக்கு இன்று (நேற்று) காலை காட்டுவதாக உறுதியளித்ததையடுத்து ஆர்ப் பாட்டத்தை கைவிட்டிருந்தனர்.

நேற்று காலை எரிபொருள் நிலையத்துக்கு வருகை தந்த பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகள், வாழைச்சேனை பொலிஸார், இராணுவத்தினர் கூட்டுறவுச் சங்க அதிகாரிகள் ஆகியோர் மக்களுக்கு இருப்பை காண்பித்த பின்னர் பெற்றோ லும் மண்ணெண்ணெயும் விநி யோகிக்கப்பட்டது.

பெற்றோல் 330 லீற்றர் இருப் பில் 270 லீற்றர் கட்டாயம் இருக்க வேண்டும் என்பதற்க மைய 60 லீற்றர் பெற்றோல் 300 ரூபாய் வீதம் 94 நபர்களுக்கு விநியோகிக்கப்பட்டதுடன் மண்ணெண்ணெய் 1300 லீற்றர் இருப்பு இருந்ததுடன் அதில் ஆயிரம் லீற்றர் மண்ணெண் ணெய் முன்நூறு ரூபாய் வீதம் 290 நபர்களுக்கு வழங்கப்பட் டது. (அ)

# அரசு மீது நம்பிக்கையை இழந்துள்ளது சர்வதேசம்

## சுதந்திரக் கட்சி சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஜூலை 01**

**தற்போதைய அரசின் மீது தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக நம் பகத்தன்மை இல்லை என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தவிசாளர் ரோஹன லக்ஸ்மன் பியதாஸ தெரிவித்தார்.**

இது தொடர்பில் ஊடகங் களிடம் அவர் மேலும் தெரி விக்கையில்,

நாட்டில் நிலவும் நெருக்கடி நிலையைத் தீர்த்துக்கொள்ள வெளிநாடுகளின் ஒத்துழைப்புக் களும் உதவிகளும் மிகவும் அவ சியம். அதற்கு முன்னர் சர்வ தேசத்திடம் நம்பகத்தன்மை யைக் கட்டியெழுப்புவதற்காக சர்வகட்சி அரசை நியமிக்க வேண்டும். இந்தச் செயற்பாடு உடனடியாக மேற்கொள்ளப் பட வேண்டும்-என்றார். (அ)



## கந்தக்காடு சம்பவம்:

# இதுவரை 261 பேர் கைது; தேடுதல் தொடர்கின்றது!

கொழும்பு, ஜூலை 01

போதைப்பொருட்களுக்கு அடிமையானவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள வெலி கந்தை - கந்தக்காடு சிகிச்சை மற்றும் புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் இருந்து தப்பிச் சென்ற ஏனையவர்கள் தொடர்ந்தும் தேடப்படு கின்றனர்.

புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் தர் ஷன ஹெட்டியாராச்சி இத னைத் தெரிவித்துள்ளார்.

தப்பிச் சென்றவர்களில் இதுவரை 261 பேர் பொலிஸா ரினால் பொறுப்பேற்கப்பட் டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள் ளார். சம்பவம் தொடர்பில் உள்ளக விசாரணைகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தங்கியிருந்த அறைகளில் உள்ள கம்பிகளை உடைத்து கொண்டு சுமார் 500க்கும் அதிகமானவர்கள் கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத் தில் இருந்து நேற்றுமுன்தினம் அதிகாலை தப்பிச் சென்றனர்.

இரு தரப்பினருக்கு இடையே ஏற்பட்ட மோதலை அடுத்து அவர்கள் தப்பிச் சென் றனர். குறித்த மோதல் சம்பவத் தில் பதுளை-தெமோதரை பகுதியைச் சேர்ந்த 36 வயது டைய ஒருவர் உயிரிழந்தார்.

எவ்வாறாயினும், தப்பிச் சென்றவர்களை கைது செய்வ தற்காக பொலிஸார், பொலிஸ் விஷேட அதிரடிப்படையினர் மற்றும் இராணுவத்தினர் தொடர்ந்தும் தேடுதல்களை முன்னெடுக்கின்றனர்.

தப்பிச் சென்றவர்களை கைது செய்ய முற்பட்டபோது சோமாவதிய - பொலனறுவை வீதியின் பெரியாறு பாலத் துக்கு அருகில் அமைதியின்மை ஏற்பட்டது. தப்பிச் சென்றவர் கள் பாதுகாப்பு தரப்பினர் மீது கல்வீச்சு தாக்குதல்களை நடத் தியுள்ளனர்.

அவர்களை கட்டுப்படுத்து வதற்காக பொலிஸார் கண் ணீர்ப்புகை பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர்.

சிலர், மோதலில் பலியா னவரின் சடலத்தை பெரியாறு பாலத்திற்கு அருகில் வைத்துக் கொண்டு எதிர்ப்பில் ஈடுபட் டனர்.

இதன்போது, ஏற்பட்ட அமைதியின்மையை கட்டுப் படுத்துவதற்காக பொலிஸார் கண்ணீர்ப்புகை பிரயோகத்தை மேற்கொண்டனர்.

இதனையடுத்து அவர்கள் சடலத்தை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். எவ்வாறாயி னும், சம்பவத்தின்போது ஏற்பட்ட மரணம் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப் படுவதாக பொலிஸ் ஊடக பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். (அ)

# பிரசவத் திகதிக்கு 15 நாட்களுக்கு முன்னரே கர்ப்பிணிகள் வைத்தியசாலை வரவேண்டும்

கொழும்பு, ஜூலை 01

இலங்கையில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி நிலை மேலும் தீவிரமடைந்து வரும் நிலையில் கர்ப்பிணி தாய் மாருக்கு முக்கிய அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தற்போதைய எரிபொருள் நெருக்கடியினால் அவசரமாக வைத்தியசாலையில் அனுமதிக் கப்படுவதற்கான வசதிகள் இல் லாத கர்ப்பிணித் தாய்மார்கள், பிரசவ திகதிக்கு சுமார் 15 நாட் களுக்கு முன்னதாக வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட வேண்டுமென மகப்பேறு மற்றும் பெண் நோயியல் நிபுணர்கள் நிறுவகம் தெரிவிக் கின்றது.

வீட்டில் பிரசவம் செய்வது தாய்க்கும் பிறந்த குழந்தைக்கும் ஆபத்தை விளைவிக்கும் என்று அவர்கள் சுட்டிக்காட்டுகின்ற னர். (அ)

# வவுனியாவைச் சேர்ந்த நால்வர் தமிழகத்தில் அகதிகளாக தஞ்சம்!

யாழ்ப்பாணம், ஜூலை 01

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடும் பொருளாதார நெருக்கடி காரணமாக வவுனியா மாவட் டத்தில் இருந்து ஒரே குடும் பத்தைச் சேர்ந்த நான்கு பேர் அகதிகளாக தனுஷ்கோடி சென்றுள்ளனர்.

இலங்கை தமிழர்களை மீட்ட மரைன் பொலிஸார் ராமேஸ்வரம் மரைன் காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரணை மேற் கொண்டுள்ளனர்.



விசாரணைக்கு பின்னர் 4 பேரும் மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்கப்படு வார்கள் என தமிழகத் தகவல் கள் தெரிவிக்கின்றன.

பொருளாதார நெருக்கடி காரணமாக இதுவரை இலங்கை தமிழர்கள் 96 பேர் அகதிகளாக தமிழகம் சென்றுள்ளமை குறிப் பிடத்தக்கது.

முன்னதாக, இலங்கையை சேர்ந்த 10 பேர் தனுஸ்கோடி 4ஆம் மணல் திட்டில் கைவிடப் பட்ட நிலையில் அடையாளம் காணப்பட்டிருப்பதாக செய்தி வெளியாகியிருந்த நிலையில் இவ்வாறு மீட்கப்பட்டவர்கள் மேற்குறித்த நால்வர் என தெரி யவந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (அ)

## எரிபொருள் நெருக்கடி;

# தற்காலிகமாக மூடப்படும் வவுனியா தாதியர் கல்லூரி

கொழும்பு, ஜூலை 01

நாட்டில் ஏற்பட்டுள்ள எரி பொருள் நெருக்கடி காரண மாக வவுனியா தாதியர் கல்லூ ரியை தற்காலிகமாக மூடுவ தற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய குறித்த கல்லூரி இன்று வெள்ளிக்கிழமை முதல் மறுஅறிவித்தல் வரை தற்காலி கமாக மூடப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக ஆசிரியர்கள் பணிக்கு வரமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அதேபோன்று விடுதிகளில் தங்கியுள்ள மாணவர்கள் எரி வாயு பற்றாக்குறை காரணமாக சமையல் செய்ய முடியாமல் தவிக்கின்றனர்.

அத்துடன், பகல் வேளை யில் மின்சாரம் தடைப்படுவ தால் மருத்துவ நடவடிக்கைகள் மற்றும் கற்பித்தல் நடைமுறை என்பனவும் பாதிக்கப்பட்டுள்ள தாக கல்லூரி நிர்வாகம் சுட்டிக் காட்டியுள்ளது. (அ)

# மருந்து தட்டுப்பாடு தீர்க்கப்படாவிடின் எதிர்காலத்தில் பெரும் ஆபத்து வரும்!

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை



கொழும்பு, ஜூலை. 01

**நாட்டினுள் நிலவும் மருந்து தட்டுப்பாடு தொடர்பில் அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்கா விட்டால் எதிர்வரும் காலத்தில் கடுமையான பிரச்னைகளுக்கு முகங்கொடுக்க நேரிடும் என அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

அந்த சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித்த அலுத்கே இதனை தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலையில் அனைத்து வைத்தியசாலைகளிலும் மருந்து தட்டுப்பாடு நிலவுவதாக அவர் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் இடம்பெற்ற சந்திப்பை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போது அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அனைத்து வைத்திசாலைகளிலும் அத்தியாவசிய மருந்துகளில் கட்டுப்பாடுகளை காணக்கூடியதாக உள்ளது. எமக்கு சுதந்திரமாக மருந்துகளைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது. நாம் ஓரளவுக்கு அதிர்ஷ்டசாலிகள். தற்போது மருந்து பற்றாக்குறை காணப்பட்டபோதிலும் மாற்று பயன்பாடு உள்ளது. ஒரு மருந்து இல்லை என்றால் மற்றொரு மருந்து உள்ளது. எதிர்வரும் இரண்டு வாரங்களை உரிய முறையில் நிர்வகிக்கவில்லை என்றால் நோயாளி ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவுடன் மருந்து இல்லாமல் இறக்கக்கூடும்-என்றார். (அ)

# தொடரும் எரிபொருள், உர நெருக்கடி; பழங்கள், மரக்கறி ஏற்றுமதி பாதிப்பு!

கொழும்பு, ஜூலை. 01

இலங்கையில் தற்போது நீடித்துவரும் எரிபொருள் மற்றும் உர நெருக்கடி காரண மாக பழங்கள் மற்றும் மரக்கறி ஏற்றுமதியும் பாதிப்படைந்துள்ளது.

தற்போதைய எரிபொருள் மற்றும் உர நெருக்கடி காரணமாக மரக்கறி மற்றும் பழங்களின் ஏற்றுமதிக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக அதன் ஏற்றுமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் நாட்டின் மரக்கறி மற்றும் பழங்கள் சர்வதேச சந்தையை இழக்கும் அபாயம் உள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

நாட்டின் மரக்கறிகள் மற்றும் பழங்களுக்கு மத்திய கிழக்கு நாடுகளில் அதிக கேள்வி நிலவுகின்ற நிலையில், வெளிநாடுகளுக்கான ஏற்றுமதிகள் ஊடாக 80 முதல் 90 மில்லியன் அமெரிக்க டொலர் வருமானமாக கிடைக்கப்பெறுவதாக ஏற்றுமதியாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

# இந்தியா வழங்குகின்ற யூரியா உரம் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படும்

கொழும்பு, ஜூலை. 01

இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படவுள்ள யூரியா உரத்தை சிறுபோக செய்கையில் ஈடுபடும் சகல விவசாயிகளுக்கும் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர, அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அதிகாரிகளுடன் நேற்று முன் தினம் இடம்பெற்ற சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த விவசாய அமைச்சர், ஒரு ஹெக்ரேயருக்கு 100 கிலோகிராம் வீதம் வழங்குமாறு தெரிவித்துள்ளார். (அ)

# துப்பாக்கி சூடுகளால் அதிர்கின்றது நாடு!

## ஒரு மாதத்தில் மட்டும் 20 பேர் படுகொலை!

கொழும்பு, ஜூலை. 01

இலங்கையில் அண்மைக் காலமாக துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. கடந்த மே 30 ஆம் திகதி முதல் நேற்று முன் தினம் (ஜூன் 29) வரை மாத்திரம் 20 பேர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், இந்தச் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் 7 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

மேற்படி சம்பவங்கள் தொடர்பில் இதுவரை நான்கு சந்தேகநபர்கள் மட்டுமே கைது செய்யப்பட்டுள்ளனர்.

சுட்டுப் படுகொலை செய்யப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் பாதாள உலகக் குழுக்களுடன் தொடர்புடையவர்கள் எனவும், அது சம்பந்தமான வழக்குகளுடன் சம்பந்தப்பட்டவர்கள் எனவும் பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றும் கொழும்பில் இருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# மாந்தை கிழக்கு பிரதேசத்தில் தொடரும் குற்றச் செயல்கள்!

## நட்டாங்கண்டல் பொலிஸார் மீது குற்றச்சாட்டு

முல்லைத்தீவு, ஜூலை. 01

முல்லைதீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பிரதேசத்திற்குற்பட்ட பகுதிகளில் இடம்பெறும் குற்றச்செயல்கள் தொடர்பில் பிரதேச மக்களால் நட்டாங்கண்டல் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யச் சென்றபோது முறைப்பாடு ஏற்கப்படாமல் மக்கள் திருப்பி அனுப்பப்படுவதாக பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

அண்மைக்காலமாக மாந்தை கிழக்கு பிரதேசத்தில் மக்களின் கால்நடை வாழ்வாதாரங்கள் இரவோடு இரவாக இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்படுவதாகவும், விவசாய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் நீர் இறைக்கும் இயந்திரங்கள் தொடர்ச்சியாக களவாடப்பட்டு வருவதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த குறித்த சம்பவங்கள் தொடர்பில் பிரதேச பொலிஸ் நிலையமான நட்டாங்கண்டல் பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு பதிவு செய்யச் சென்றவேளை பொலிஸாரினால் முறைப்பாடுகள் ஏற்கப்படாமல் மக்கள் திருப்பி அனுப்பப்படுகின்றனர் என தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை 4,5 நாட்கள் கடந்த நிலையில்தான் முறைப்பாட்டை பொலி ஸார் ஏற்றுக்கொள்கின்றனர் என்று தெரி வித்த பிரதேச மக்கள், இரவு நேரங்களில் இடம்பெறும் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய நபர்களுக்கு பொலிஸாரும் உடந்தையாக இருக்கின்றனரா என்றும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். (அ)

# சங்கானையில் ஓட்டோ சாரதிகள் பெற்றோல் கோரிப் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜூலை. 01

சங்கானை ஓட்டோ சங்கத்தினர் தங்களுக்குரிய எரிபொருள் கிடைக்கப் பெறாததை அடுத்து நேற்று காலை சங்கானை பஸ் தரிப்பு நிலையத்துக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது சங்கானை பஸ் தரிப்பு நிலைய வாடகை சேவை வாகனங்களுக்கான எரிபொருளைத் தாருங்கள், வேண்டும், வேண்டும் பெற்றோல் வேண்டும்!, முச்சக்கர வண்டிச் சேவை உங்களுக்கு தேவை இல்லையா?, எமது வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு எமக்கான எரிபொருளை தங்கு தடை இன்றி தாருங்கள்!, எரிபொருள் மாபியாக்களைச் சட்டத்திற்கு முன் நிறுத்துங்கள்! என்ற கோஷங்களை எழுப்பியவாறு அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

# மன்னார் நகர சபையின் கழிவு அகற்றல் ஸ்தம்பிதம்

மன்னார், ஜூலை. 01

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மன்னார் நகர சபையினால் முன்னெடுக்கப்பட்டு வரும் கழிவு அகற்றும் நடவடிக்கையும் பாதிக்கப்பட்டுள்ளதாக மன்னார் நகர முதல்வர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் மாவட்டத்தில் எரி பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் மன்னார் நகர சபையின் கழிவு அகற்றும் வாகனங்களுக்கான எரிபொருட்கள் உரிய முறையில் கிடைப்பதில்லை.

இதனால் மன்னார் நகர பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் கழிவு அகற்றும் நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

கழிவு அகற்றும் வாகனங்களுக்கான எரி பொருட்கள் முழுமையாக கிடைக்கவில்லை.

இதன் காரணமாக கழிவு அகற்றும் நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்க பாரிய சவாலுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நிலை தொடருமாக இருந்தால் மன்னார் நகர பகுதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் சகலவிதமான கழிவு அகற்றும் நடவடிக்கைகளும் இடைநிறுத்தப்படும். மக்களும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படும்.

எனவே உரிய அதிகாரிகள் குறித்த விடயத்தில் கவனம் செலுத்தி மன்னார் நகர சபையின் கழிவு அகற்றும் நடவடிக்கைக்கு பயன்படுத்தப்படும் வாகனங்களுக்கு தேவையான எரிபொருட்களை உரிய முறையில் வழங்க நடவடிக்கைகளை மேற்கொண்டால் கழிவு அகற்றும் நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல முடியும்-என்றார். (அ)

# நாட்டை மீட்டெடுக்க நாம் தயார்நிலையில்!

## அநுரகுமார அறிவிப்பு



கொழும்பு, ஜூலை 01

**“ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச , பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசு பதவி விலக வேண்டும். அதுவரை நாம் ஓயபோவதில்லை. எமது ஆட்டம் தொடரும்.”**

இவ்வாறு ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க சூளுரைத்தார்.

“மக்களால் வீடு செல்லுமாறு வலியுறுத்தப்படுபவர்தான் கோட்டா, மக்களால் விரட்டியடிக்கப்பட்டவர்தான் ரணில், இவர்கள் இருவராலும் நாட்டை ஆள முடியாது, மக்களுக்கு நல்லதை செய்ய முடியாது.” - எனவும் அநுர குமார திஸாநாயக்க சுட்டிக்காட்டினார்.

சர்வதேசம் எமது நாட்டுக்கு உதவும், ஆனால் எம்மை தூக்கிவிடாது. நாம்தான் எழ வேண்டும். அதற்கான அரசியல் தலைமைத்துவத்தை வழங்க தேசிய மக்கள் சக்தி தயார். தேர்தல் நடத்தப்படும்வரை இடைக்கால அரசை பொறுப்பேற்கவும் தயார்” எனவும் அவர் அறிவிப்பு விடுத்தார். (அ)



# திருக்கோணேச்சரத்துக்கு மக்களின் வருகை குறைவு

திருமலை, ஜூலை 01

எரிபொருள் இன்மையால் திருக்கோணேச்சரம் ஆலய வெளிப்பகுதி வியாபாரிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றான வரலாற்று சிறப்பு மிக்க திருக்கோணேச்சரம் ஆலயத்துக்கு அதிகளவான மக்கள் சென்று வழிபடுவதுடன், சுற்றுலாப் பயணிகளும் அங்கு அதிகளவில் சென்று வருகின்றமை வழக்கமானது.

இந்த நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி காரணமாக அங்கு மக்கள் செல்வது மிகக்குறைவாக காணப்படுகின்றது. சுற்றுலாப் பயணிகளும் இதற்கு விதிவிலக்கல்ல. இதனால் கோவில் வணக்க பகுதிக்கு வெளியே காணப்படும் வர்த்தக நிலையங்கள் பல பூட்டப்பட்டு காணப்படுகின்றன.

அதேவேளை, தமக்கு வர்த்தகம் மேற்கொள்ள முடியாத நிலை காணப்படுவதாகவும், கிடைக்கும் வருமானம் நாளாந்த செலவுகளுக்கே போதுமானதாக இல்லை எனவும் அவர்கள் கவலை வெளியிடுகின்றனர்.

வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடும் பலர் அனுராதபுரம் உள்ளிட்ட பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவிக்கின்றனர். (அ)

# எரிபொருள் நெருக்கடி; 3 நாட்களே சபை கூடும்!

கொழும்பு, ஜூலை 01

எரிபொருள் நெருக்கடி காரணமாக பாராளுமன்ற அமர்வு அடுத்த வாரமும் 3 நாட்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 4,5 மற்றும் 6 ஆம் திகதிகளில் மட்டுமே பாராளுமன்றம் கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் தலைமையில் நேற்று நடைபெற்ற பாராளுமன்ற நடவடிக்கை தொடர்பான குழுக் கூட்டத்திலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# சாள்ஸ் நிர்மலநாதன் அமெரிக்கா பயணம்!

வவுனியா, ஜூலை 01

வட அமெரிக்க தமிழ்ச் சங்க பேரவை 35 ஆவது ஆண்டாக நடத்தும் மாபெரும் பேரவை தமிழ் விழாவில் பங்கேற்பதற்காக வட அமெரிக்க தமிழ்ச் சங்கத்தின் அழைப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் நேற்று அமெரிக்கா பயணமானார்.

இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் 4 ஆம் திகதி வரை நியூயோர்க்கில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

இந்த பயணத்தில் அமெரிக்க அரசின் இராஜாங்க திணைக்களங்களின் உயர் அதிகாரிகளுடனும் தமிழர் தரப்பு நிலைப்பாடு தொடர்பாக கலந்துரையாட சந்திப்புக்களும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அத்தோடு அமெரிக்க வாழ் தமிழ் அமைப்புகள் பலரோடும் அவர் சந்திப்புக்களை மேற்கொள்ளவுள்ளார்.

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனும் குறித்த நிகழ்வுகளில் பங்கேற்பதற்காக ஏற்கனவே அமெரிக்கா சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஏற்றுமதி வருமானம் உயர்வு!

கொழும்பு, ஜூலை 01

இலங்கையின் ஏற்றுமதிகள் இந்த வருடத்தின் முதல் ஐந்து மாதங்களில் 5 பில்லியன் அமெரிக்க டொலர்களை பதிவு செய்துள்ளதாக ஏற்றுமதி அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.

இலங்கை சுங்கத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட தரவுகளின்படி 2022 மே மாதத்தில் வர்த்தகப் பொருட்கள் ஏற்றுமதியின் வருமானம் 980.2 மில்லியன் அமெரிக்க டொலர்களாக (9.9%) அதிகரித்துள்ளது.

இதில் முக்கியமாக ஆடை கைத்தொழில், பலசரக்கு பொருட்கள், தென்னை சார்ந்த உற்பத்திகள், அலங்கார மீன் மற்றும் மின்சார உபகரணங்களின் ஏற்றுமதி அதிகரித்து ஏற்றுமதி வருமானமும் அதிகரித்துள்ளது.

இந்த பொருட்களில் அதிக அளவில் அமெரிக்காவுக்கே ஏற்றுமதி செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

2022 ஆம் ஆண்டு மே மாதத்தில் தைத்த ஆடை மற்றும் புடவை ஏற்றுமதி 30.1 வீதமாக அதிகரித்துள்ளது. இது 482.7 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். (அ)

# ஐ.ஓ.சியிடமிருந்து டீசல் கொள்வனவு

கொழும்பு, ஜூலை 01

லங்கா ஐ.ஓ.சி. நிறுவனத்திடம் இருந்து 7,500 மெட்ரிக் தொன் டீசலை கொள்வனவு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதற்கான பணப்பரிமாற்றமும் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, குறித்த டீசல் இருப்புக்களை அத்தியாவசிய சேவைகளுக்கு மாத்திரம் பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை, தொடரும் எரிபொருள் நெருக்கடி காரணமாக ஊழியர்கள் பணிக்கு சமூகமளிக்காவிட்டால் சில ரயில் பயணங்களை இரத்து செய்ய நேரிடும் என ரயில்வே கட்டுப்பாட்டாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# மீன்தொட்டிக்குள் விழுந்து 3 வயதுக் குழந்தை மரணம்!

கொழும்பு, ஜூலை 01

பன்வில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மடுகெலே பகுதியில் 3 வயதுடைய குழந்தையொன்று மீன் தொட்டிக்குள் விழுந்து உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டின் முன்பகுதியில் இருந்த மீன்களை வளர்ப்பதற்கு பயன்படுத்தப்படும் இரண்டரை அடி ஆழமான தண்ணீர் தொட்டியில் விழுந்தே குறித்த குழந்தை உயிரிழந்துள்ளது.

சம்பவத்தின்போது குழந்தையின் நான்கு உடன்பிறப்புகளும் பாடசாலைக்கு சென்றிருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

குழந்தையும் தாயும் வீட்டில் இருந்த நிலையில், வீட்டின் முன் தனியாக விளையாடிக் கொண்டிருந்த குழந்தை மீன் தொட்டிக்குள் விழுந்துள்ளது.

உயிரிழந்த குழந்தையின் சடலம் தெல்தெனிய வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# ரூ.25 இலட்சம் பெறுமதியான பொருட்களுடன் பதுளையில் திருட்டு ஜோடி நேற்று சிக்கியது!

கொழும்பு, ஜூலை 01

பதுளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிராமங்களில் வீடுகள், கடைகளில் திருடப்பட்ட சுமார் 25 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

அதுமட்டுமின்றி அந்தப் பொருட்களுடன் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய ஒரு ஜோடியை சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்தனர்.

பதுளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுஜித் வெதமுல்லவின் பணிப்புரையின் பேரில் பதுளை பொலிஸ் தலைமையக அதிகாரிகள் குழுவால் இந்தச் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

பொலிஸாரின் தகவலின் படி, அப்பகுதியில் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டனர் எனச் சந்தேகிக்கப்படும் தம்பதியிடம் இந்தப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

கணிணி துணைக்கருவிகள், எரிவாயு சிலிண்டர்கள் மற்றும் மின் சாதனங்கள் உட்பட சுமார் 25 இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் ஏனைய சந்தேகநபர்களை கைதுசெய்வதற்காகப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பதுளை தலைமையகப் பொலிஸ் அத்தியட்சகர் சுஜித் வெதமுல்லவின் பணிப்புரையின் பேரில் பதுளைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)




# “கோ கோட்டா கோ”

மெல்பேர்ண், ஜூலை 01

அவுஸ்திரேலியாவின் மெல்பேர்ன் நகரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை திறக்கப்பட்ட வர்த்தக நிலையமே இது.

240, கிளைடி வீதி, பிரேவிக் என்ற முகவரியில் அமைந்துள்ள இந்த வர்த்தக நிலையத்தின் பெயர் கோ கோட்டா கோ (GO GOTA GO) என்பதாகும்.

இலங்கையைச் சேர்ந்த சம்பிக்க ஹேவாமத்தும என்பவருக்குச் சொந்தமானது. (அ)

# தேர்தல் ஆணையத்தில் முறையிட்ட ஓ.பி.எஸ்: சின்னம் முடங்குமா?

## முன்னாள் தேர்தல் ஆணையர் கோபாலசாமி விளக்கம்

ஆ. விஜயானந்த்



அ.தி.மு.கவின் சட்ட விதிகளுக்குப் புறம்பாக சில முடிவுகள் எடுக்கப்பட்டதாகக் கூறி தேர்தல் ஆணையத்துக்கு அக்கட்சியின் ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் கடிதம் எழுதியுள்ளார். இதன்மூலம் அ.தி.மு.கவில் என்ன நடக்கும்? ஜூலை 11 ஆம் திகதி அ.தி.மு.க பொதுக்குழு நடக்குமா?

சென்னை வானகரத்தில் கடந்த 23 ஆம் திகதி நடந்த அ.தி.மு.க பொதுக் குழுவில், 23 தீர்மானங்களையும் நிராகரிப்பதாக அக்கட்சியின் துணை ஒருங்கிணைப்பாளர் கே.பி.முனுசாமியும் முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகமும் தெரிவித்தனர். அதேநேரம், கட்சியின் அவைத் தலைவராக தமிழ்மகன் உசேன் நியமிக்கப்படுவதாக எடப்பாடி பழனிசாமி அறிவித்தார். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஓ.பன்னீர்செல்வம், வைத்திலிங்கம், ஜே.சி.டி.பிரபாகர், மனோஜ் பாண்டியன் உள்ளிட்டோர் வெளிநடப்பு செய்தனர்.

பொதுக்குழு உறுப்பினர்களில் பெரும்பான்மை ஆதரவு தனக்கு உள்ளதாக எடப்பாடி பழனிசாமி தரப்பினர் தெரிவித்தாலும், புதிய தீர்மானங்களை நிறைவேற்றுவதற்கு நீதிமன்றம் விதித்த தடையால் “ஒற்றைத் தலைமை“ என்ற விருப்பத்தை எடப்பாடி பழனிசாமியால் அடைய முடியவில்லை. இதையடுத்து, தனது ஆதரவாளர்களுடன் சட்ட ரீதியான ஆலோசனைகளை எடப்பாடி பழனிசாமி மேற்கொண்டு வருகிறார்.

இந்நிலையில், அவசரப் பயணமாக டெல்லி சென்ற ஓ.பன்னீர்செல்வம், கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று தேனி மாவட்டத்துக்குச் சென்றார். அன்று இரவே, அ.தி.மு.க தலைமைக் கழகத்தில் திங்கள்கிழமையன்று காலையில் தலைமைக் கழக நிர்வாகிகளின் கூட்டம் நடைபெற உள்ளதாக அறிவிப்பு ஒன்று வெளியானது.

“இந்தக் கூட்டம் செல்லாது” எனக் கூறி ஓ.பன்னீர்செல்வம் தரப்பில் அறிக்கையும் வெளியானது. இதனைப் பொருட்படுத்தாமல் தலைமைக் கழக நிர்வாகிகளின் கூட்டத்தை எடப்பாடி பழனிசாமி கூட்டினார். “இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளைப் பற்றி தற்போது கூற முடியாது“ என முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

### ஓ.பி.எஸ் எழுதிய கடிதம்

இதனைத் தொடர்ந்து அ.தி.மு.கவுக்குள் நடக்கும் பல்வேறு விவகாரங்கள் தொடர்பாக இந்தியத் தேர்தல் ஆணையத்துக்கு ஓ.பன்னீர்செல்வம் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார். ஒன்பது பக்கங்கள் உள்ள அந்தக் கடிதத்தில், “மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1951 பிரிவு 29 (ஏ) (9) ஆகியவற் றின்படி இந்தக் கடிதத்தை எழுதுகிறேன். கடந்த 2017 செப்டம்பர் மாதம் 12 ஆம் தேதியன்று அ.தி.மு.கவின் சட்டவிதிகளில் திருத்தம் கொண்டு வரப்பட்டது. அதன்படி, அ.தி.மு.கவில் ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் என்ற புதிய விதிகள் உருவாக்கப் பட்டன. இந்தப் பதவிகள் பொதுக்குழு உறுப்பினர்களால் தேர்வு செய்யப்பட வேண்டும் எனவும் இதன் பதவிக்காலம் ஐந்தாண் டுகள் எனவும் முடிவு செய் யப்பட்டது. இது தொடர்பாக, தேர்தல் ஆணையத்துக்கு முறையாகத் தெரிவிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது” எனக் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து அந்தக் கடிதத்தில், “ஒருங் கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் என்ற அமைப்பிலேயே இந்தியத் தேர்தல் ஆணையம் மற்றும் மாநிலத் தேர்தல் ஆணையம் நடத்திய பல்வேறு தேர்தல்களைச் சந்தித்தோம். இந்த நிலையில், அ.தி.மு.க பொதுக்குழு கூட்டம் ஜூன் 23 ஆம் திகதியன்று நடைபெறும் என ஜூன் 2 ஆம் திகதி ஒருங்கிணைப்பாளர் மற்றும் இணை ஒருங்கிணைப்பாளர் ஆகியோரால் அறிவிக்கப்பட்டது. ஆனால், கட்சிக்கு ஒற்றைத் தலைமை தொடர்பாக சில விரும்பத்தகாத சம் பவங்கள் நடந்தன. அங்கே நிறைவேற் றப்பட இருந்த 23 தீர்மானங்களையும் நிராகரிப்பதாக முன்னாள் அமைச்சர் சி.வி.சண்முகம் தெரிவித்தார்.

பொதுக்குழுவில் எந்த விவாதங்களும் மேற்கொள்ளாமல் அனைத்து தீர்மானங்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன. ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர், புதிதாக தேர்வு செய்யப்பட்ட நிர்வாகிகள் ஆகியோருக்கு எந்தவித ஒப்புதலும் அளிக்காமல் வரலாற்றில் முதல் முறையாக பொதுக்குழு கூட்டத்தில் தீர்மானங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. சட்டத்துக்குப் புறம்பான அந்தப் பொதுக்குழு கூட்டத்தில் அவைத் தலைவர் மூலம் புதிய பொதுக் குழு தேதியும் அறிவிக்கப்பட்டது. இது தொடர்பான தகவல்கள் எதுவும் முன்கூட்டியே எனக்குத் தெரிவிக்கப்படவில்லை. இதற்கு எதிர்ப்பு தெரிவித்துவிட்டு வெளியேறினோம்“ எனக் குறிப்பிட்டுள்ளார்.



### தீவிர ஆலோசனையில் எடப்பாடி

இதற்குப் பதில் அளிக்கும் வகையில், “ ஒருங்கிணைப்பாளரான ஓ.பன்னீர்செல்வத்துக்கு போதுமான ஆதரவு இல்லை, பொதுக்குழு உறுப்பினர்கள், எம்.பி, எம்.எல்.ஏக்கள், மாவட்ட செயலாளர்கள் என பெரும்பான்மை ஆதரவு எடப்பாடி பழனிசாமிக்கே உள்ளது” எனக் கூறி தேர்தல் ஆணையத்துக்கு விரிவான கடிதம் அனுப்பப்பட உள்ளதாக எடப்பாடி தரப்பினர் கூறுகின்றனர். இதற்கான ஏற்பாடுகளை எடப்பாடி பழனிசாமியின் வழக்கறிஞர் குழு மேற்கொண்டு வருகிறது. “கட்சியின் பொதுக்குழு உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவு எடப்பாடிக்கே உள்ளது என்பதையும் தேர்தல் ஆணையத்தில் நிரூபிக்க உள்ளோம்” எனவும் அவர்கள் கூறுகின்றனர்.



அ.தி.மு.கவில் இரு தரப்புக்கும் இடையே மோதல் வலுத்துள்ள நிலையில், ஜூலை 11 ஆம் தேதி நடக்கவுள்ள அ.தி.மு.க பொதுக்குழுவுக்கு சட்ட ரீதியாக தடையைப் பெறும் முயற்சிகளில் ஓ.பன்னீர்செல்வம் ஈடுபட்டுள்தாகக் கூறப்படுகிறது. இதனால், “பொதுக்குழு நடக்குமா?“ என்ற கேள்வியும் அக்கட்சியின் தொண்டர்கள் மத்தியில் எழுந்துள்ளது.

“பொதுக்குழுவில் விரும்பத்தகாத சம்பவங்கள் அரங்கேறியதாக தேர்தல் ஆணையத்துக்கு ஓ.பன்னீர்செல்வம் கடிதம் எழுதியுள்ளார். இதன்பேரில் தேர்தல் ஆணையம் என்ன நடவடிக்கை எடுக்க முடியும்?“ என இந்திய அரசின் முன்னாள் தலைமை தேர்தல் ஆணையர் கோபாலசாமியிடம் கேட் டோம்.

“தேர்தல் ஆணையத்துக்கு அனுப்பப்பட்டுள்ள கடிதத்தில் என்ன கூறப்பட்டுள்ளது எனத் தெரியவில்லை. “அரசியலமைப்புச் சட்டத்தின்படி நடக்கவில்லை” என அவர் கூறலாம். அ.தி.மு.கவில் நடந்துள்ள விருப்பத் தகாத சம்பவங்களைப் பற்றிப் பேச வேண்டியதில்லை. அங்கு என்ன வேண்டுமானாலும் நடக்கும். அரசியலமைப்புச் சட்டத்தின்படி நடக்காமல் விதிமீறல் நடந்துள்ளதா என்பதைத்தான் தேர்தல் ஆணையம் பார்க்க முடியும். அவர்கள் ஒருவருக்கொருவர் அடித்துக் கொணடாலும் வசை பாடினாலும் அதைப் பற்றியெல்லாம் பேச வேண்டியதில்லை. சட்டவிதிகளை முறையாகப் பின்பற்றியுள்ளார்களா என்பதுதான் முக்கியம்“ என்கிறார்.

### சின்னத்துக்கு சிக்கல் வருமா?

“ இதில் 2 விஷயங்கள் உள்ளன. “ஒருங்கிணைப்பாளர் பதவியில் 5 ஆண்டுகளுக்கு இருக்கலாம்“ என எந்தக் குழு தீர்மானம் செய்ததோ, அதே குழு, “5 ஆண்டுகள் தேவையில்லை, 3 ஆண்டுகள் போதும்“ எனக் கூறினால் அதனைக் கேள்வியெழுப்ப முடியாது. அதேநேரம், விதிமுறைகளை முறையாகப் பின்பற்றவில்லையென்றால் சிக்கல் வரும். கட்சிக்கென உள்ள வழிகாட்டல்களின்படிதான் முடிவெடுக்க முடியும். அவ்வாறு பின்பற்றவில்லையென்றால் தேர்தல் ஆணையம் பரிசீலித்து முடிவெடுக்கும்” என்கிறார்.

“தேர்தல் ஆணையம் மற்றும் நீதிமன்றத்தில் முறையிடுவதன் மூலம் இரட்டை இலைச் சின்னம் முடங்கலாம் என்றொரு கருத்தும் பேசப்படுகிறதே?” என்றோம்.

“ இரட்டை இலையை கட்சிக்குக் கொடுத்துள்ளனர். அது வேறு விவகாரம். அந்தக் கட்சியே இரண்டாக பிளவுபட்டு, “இது அந்தக் கட்சியே இல்லை, அதனால் அவர்களுக்கு சின்னம் கொடுக்கக் கூடாது” என ஒரு தரப்பினர் கூறினால் அது வேறு விவகாரம். கட்சி பிளவுபட்டுள்ளதால், “நாங்கள்தான் கட்சி“ எனச் சிலர் கூறுவதற்கு எதிராக முறையிடலாம். சின்னத்தை பயன்படுத்தும் வாய்ப்பைக் கொடுக்கக் கூடாது எனவும் கூறலாம். இன்னும் அந்தளவுக்கு விவகாரம் செல்லவில்லை” என்கிறார்.

ஈழநாடு



# ஆட்சி மாற்றங்களும் தமிழர் பிரச்சினைக்கான தீர்வும்?

யதீந்திரா



ஆட்சி மாற்றமொன்று தேவை - அதன் மூலம்தான் பிரச்சினைகளை தீர்க்க முடியுமென்று, தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்திருக்கின்றார். சம்பந்தன் எந்தப் பிரச்சினைகளை பற்றிப் பேசுகின்றார்? ஒரு வேளை அவர், பொருளாதார நெருக்கடிக்கான தீர்வு தொடர்பில் பேசினால், ஆட்சி மாற்றம் தேவையென்னும் வாதம், சரியானதுதான் - ஏனெனில், பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள வேண்டுமாயின், ஒரு ஸ்திரமான அரசாங்கம் இருக்க வேண்டியது கட்டாயமானது. தற்போதுள்ள அரசாங்கம் தடுமாறிக் கொண்டிருக்கின்றது.

ஒரு புறம் ராஜபக்சக்கள் வீழ்சியுற்றாலும் கூட, மறுபுறமாக, அவர்கள் பொதுஜன பெரமுனவிற்குள் செல்வாக்குச் செலுத்திக் கொண்டிருக்கின்றனர். ஒரு ஆசன பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம், அதிகாரங்கள் போய் சேர்வதை உறுதிப்படுத்துவதற்கான 21வது திருத்தச்சட்டமானது, தொடர்ந்தும் இழுபறிநிலையிலேயே இருக்கின்றது. இந்த நிலையில் ஒரு தேர்தல் இடம்பெற்றால் மட்டும்தான் இவை அனைத்திற்கும் ஒரு முடிவு கிடைக்கும். இந்த அடிப்படையில் சிந்தித்தால், சம்பந்தன் கூறுவது போன்று, ஒரு ஆட்சி மாற்றம் அவசியம்தான். ஆனால், ஒரு வேளை, சம்பந்தன், தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வை கருத்தில் கொண்டுதான், பேசுகின்றார் என்றால், ஆட்சி மாற்றம் தொடர்பில் கேள்விகளுண்டு. ஏனெனில் 2015இல் ஏற்பட்ட ஆட்சி மாற்றம், தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்யவில்லை. புதிய அரசியல் யாப்பு ஒன்றிற்கான கற்பனையுடன் காலம் விரயம் செய்யப்பட்டது.

முன்னர் ஏற்பட்ட ஆட்சிமாற்றம் நன்மைகளை தராதபோது, இனிவரப் போகும் ஆட்சிமாற்றமொன்றின் மூலம் எவ்வாறு தமிழ் மக்கள் நன்மைகளை பெறமுடியும்? இந்தக் கேள்விக்கான பதிலை கட்டுரையின் பின்பகுதியில் நீங்கள் காணலாம். முதலில் ஆட்சி மாற்றங்களை புரிந்து கொள்ள முயற்சிப் போம். இலங்கைத் தீவில் ஏற்படும் எந்தவொரு பிரதான அரசியல் மாற்றங்களும், தமிழ் மக்களை முன்வைத்து ஏற்படுவதில்லை. ஆகக் குறைந்தது தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை ஒரு விடயமாகக் கூட இருப்பதில்லை. அது ஒரு போதும் நிகழவும் மாட்டாது. தென்னிலங்கையின் பிரதான கட்சிகள் எவையுமே, தேர்தல் காலத்தில் தமிழ் மக்களின் பிரச்சினை தொடர்பில் பேசுவதும் இல்லை. அவ்வாறு பேசினால் தங்களின் வெற்றிவாய்ப்பு பாதிக்கப்படுமென்றே அவர்கள் கருதுகின்றனர். அவ்வாறாயின் மாற்றங்கள் எந்த அடிப்படையில் நிகழ்கின்றன? அனைத்துமே தென்னிலங்கை அதிகார மையத்திற்குள் ஏற்படும் முரண்பாடுகளின் காரணமாகவே நிகழ்கின்றன. இந்த மாற்றங்களே ஆட்சி மாற்றத்தை உந்தித் தள்ளுகின்றது. இவ்வாறுதான் 2015இல் ஆட்சி மாற்றம் நிகழ்ந்தது.

தற்போது மீண்டுமொரு ஆட்சி மாற்றம் தொடர்பில் சிந்திக்கப்படுவதும் இந்த அடிப்படையில்தான். மகிந்த ராஜபக்சவின் குடும்ப ஆதிக்கத்தின் மீதான அச்சத்தினடிப்படையில்தான், 2015 ஆட்சி மாற்றத்திற்கான கூட்டணி உருவாக்கப்பட்டது. மைத்திரிபால சிறிசேனவை மகிந்த முகாமிலிருந்து உடைத்தெடுப்பதற்கான வாய்ப்பான சூழல் அங்கிருந்தது. ராஜபக்ச குடும்ப அரசியல் ஆதிக்கத்தின் மீதேற்பட்ட அதிருப்திகளின் விழைவாகவே, மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அணியினர், மகிந்தவிற்கு எதிராக அணிதிரண்டனர். ராஜபக்ச முகாமின் உடைவைப் பயன்படுத்தியே, ராஜபக்சவை வீழ்த்துவதற்கான வியூகம் வகுக்கப்பட்டது. இந்த கூட்டணிக்கான மேலதிக ஆதரவாகவே தமிழ் மக்களின் வாக்குகள் பயன்பட்டன. இதன் காரணமாகவே, ஆட்சி மாற்றத்தின் பின்னர், தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வு ஒரு விடயமாக எடுத்துக் கொள்ளப்படவில்லை. ஏனெனில் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வை முன்வைத்து அந்த ஆட்சி மாற்றம் நிகழவில்லை. 2015 ஆட்சி மாற்றத்திற்கு பின்னர் இடம்பெற்ற விடயங்களிலிருந்தே, நீங்கள் இதனை தெளிவாக விளங்கிக்கொள்ளலாம். நல்லிணக்கம், அரசியல் தீர்வு தொடர்பில் ஆடம்பரமாக விவாதிக்கப்பட்டாலும் கூட, இறுதியில் ரணில்-மைத்திரி அதிகார மோதலைத் தொடர்ந்து, அனைத்து முயற்சிகளும் பூச்சிய நிலைக்கு சென்றது.

இப்போது ஆட்சி மாற்றத்தை எவ்வாறு கையாளுவதென்னும் கேள்விக்கு வருவோம். இந்தக் கட்டுரையாளர் மேலே குறிப்பிட்டவாறு ஆட்சி மாற்றத்தை விளங்கிக் கொண்டால், ஆட்சி மாற்றத்தில் தமிழர்கள் ஒரு போதுமே பிரதான விடயமாக இருக்கமாட்டார்கள் என்பதை புரிந்து கொள்வதில் சிக்கல்கள் இருக்காது. இந்த அடிப்படையிலிருந்துதான், எனவே, ஆட்சி மாற்றங்களை எவ்வாறு உச்சளவில் பயன்படுத்திக் கொள்ளலாமென்று, தமிழ் தலைமைகள்தான் சிந்திக்க வேண்டும். குறிப்பிட்ட அரசியல் சூழலில் எதனை முன்னிறுத்த வேண்டும் என்பதை தமிழ் தலைமைகளே சிந்திக்க வேண்டும். அதனடிப்படையில் குறிப்பிட்ட சூழலில் எடுத்துக்கொள்ளக் கூடிய விடயங்களை இலக்கு வைத்து செயற்பட வேண்டும்.

அவ்வாறானதொரு தூரநோக்குமிக்க பார்வை சம்பந்தனிடம் இருந்திருந்தால், 2015இல் ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தை தமிழ் மக்களின் நலனை முன்னிறுத்தி உச்சளவில் பயன்படுத்தியிருக்க முடியும் ஆனால் சம்பந்தனது தவறான அரசியல் அணுகுமுறைகளால், கிடைத்த அருமையானதொரு வாய்ப்பு கைநழுவியது. ஆட்சி மாற்றத்திற்கான சூழலொன்று தெரிந்த சந்தர்பத்தில், இந்தக் கட்டுரையாளர் சம்பந்தனிடம் சில விடயங்களை வலியுறுத்தியிருந்தார். அதாவது, இந்த ஆட்சி மாற்றம் அதிக காலத்திற்கு நீடிக்காது ஏனெனில், இரண்டு முற்றிலும் மாறுபட்ட அரசியல் கருத்தியல், வெளிவிவகார பாரம்பரியம் கொண்ட கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பகுதியினரும், இணைந்து முன்னெடுக்கும் இந்த ஆட்சி மாற்றமானது, நிச்சயம், உள்முரண்பாடுகளுக்குள் சிக்கும், எனவே சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு, பெறக் கூடிய விடயங்களை பெற முயற்சிப்பதே சரியானதென்று இந்தக் கட்டுரையாளர் சம்பந்தனிடம் வலியுறுத்தியிருந்தார். ஆனால் சம்பந்தன் எதனையும் உள்வாங்கிக் கொள்ளவில்லை.



புதிய அரசியல் யாப்பு ஒன்றை கொண்டு வரமுடியுமென்று நம்பி செயற்பட்டதுதான், சம்பந்தன் மேற்கொண்ட மோசமான தவறாகும். இந்தத் தவறிலிருந்துதான் அனைத்து தவறுகளும் நிகழ்ந்தன. உண்மையில் அப்படியானதொரு அரசியல் யாப்பை கொண்டுவருவதற்கான எந்தவொரு வாய்ப்பும் இருந்திருக்கவில்லை. ஆனாலும் புதிய அரசியல்யாப்பு என்னும் பெயரில், காலம் வீணடிக்கப்பட்டது. இதற்கு பதிலாக, இருக்கின்ற அரசியல் யாப்பில் மாற்றங்களை ஏற்படுத்தி, மாகாண சபை நிர்வாகத்தை வலுப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கலாம். இதனை, நான் உட்பட, சிலர் பரிந்துரைத்திருந்த போதும், சம்பந்தன் அவர்களை பொருட்படுத்தவில்லை. அதேவேளை, கூட்டமைப்பு தவறான பாதையில் செல்வதாக வெளியிலிருந்து சுட்டிக்காட்டியவர்களும், வரமுடியாத புதிய அரசியல் யாப்பிற்குள் எவற்றையெல்லாம் உள்ளடக்க வேண்டுமென்றே விவாதம் புரிந்தனர். புதிய அரசியல் யாப்பின் மூலம் கூட்டமைப்பு ஒரு பாரிய சதியில் ஈடுபடுவதாக கதைகள் புனைந்தனர். ஆனால் இறுதியில் அனைத்து கதைகளும் பெறுமதியற்றுப் போயின. உண்மையில் கூட்ட மைப்பு சதி செய்யவில்லை, மாறாக, கற்பனையில் காலத்தை விரயம் செய்தது. ஏனையவர்கள் கூட்டமைப்பின் கற்பனை பற்றி, கற்பனை செய்தனர். புதிய அரசியல் யாப்பு தொடர்பான உரையாடல்கள் அனைத்தும், இறுதியில், கற்பனை தொடர்பான கற்பனைகளுடன் முடிவுற்றது. எப்போதெல்லாம் யதார்த்தம் புறம்தள்ளப்படுகின்றதோ - அப்போதெல்லாம் வெறும் கற்பனைகளிலேயே காலம் கரையும்.



மீண்டும் தென்னிலங்கையின் அரசியல் மோசமாக குழம்பியிருக்கின்றது. இந்தப் பின்னணியில்தான், ஆட்சி மாற்றமொன்றின் தேவை உணரப்படுகின்றது. நிச்சயம் அதுதான் நிகழவும் போகின்றது. ராஜபக்சக்கள் வீழ்சியுற்றிருக்கின்ற சூழலில், புதியதொரு தலைமைக்கான பலப்பரிட்சையிலேயே தென்னிலங்கையின் அரசியல் நிலைகொண்டிருக்கின்றது. ராஜபக்சக்களின் பொதுஜன பெரமுன, வீழ்ச்சியடைந்திருக்கின்ற அதேவேளை, எதிரணிக்குள்ளும் பிளவுகள் காணப்படுகின்றன. ஒப்பீட்டடிப்படையில், சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி அளவில் பெரிய எதிரணியாக இருந்த போதிலும் கூட, சஜித் பிரேமதாசவினால் தனித்து அதிகாரத்தை கைப்பற்ற முடியாது. எனவே ஆட்சி மாற்றத்திற்கு ஒரு வலுவானதொரு கூட்டணி தேவை. அதேவேளை, ரணில் தற்போதைய நெருக்கடி நிலையை கையாளும் பொறுப்பை ஏற்றிருப்பதால், ஐக்கிய தேசியக் கட்சியை மீளவும் ஒழுங்கமைப்பதற்கான வாய்ப்புக்களும் இருக்கின்றன. ஐக்கிய தேசியக் கட்சி தலைமையில் வலுவானதொரு கூட்டை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக்களையும் முற்றிலுமாக நிராகரித்துவிட முடியாது. ஆனால் வரப்போகும் ஆட்சி மாற்றத்தின் போது, தமிழ் மக்களின் வாக்குகள் பிரதானமாக தேவைப்படுமென்றும் கூறிவிட முடியாது. ஏனெனில் தென்னிலங்கையின் கட்சிகளுக்கிடையில், பலமானதொரு மோதல்நிலை இருக்கின்ற போதுதான், தமிழ் மக்களின் வாக்குகள் மேலதிகமாக தேவைப்படும். அவ்வாறானதொரு போட்டிநிலை இல்லாவிட்டால், ஆட்சி மாற்றத்தில் தமிழ் மக்கள் பிரதான பங்கை வகிக்க முடியாமலும் போகலாம். எது எவ்வாறிருப்பினும், கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்பத்தையும், பயன்படுத்திக் கொள்வது, தமிழ் தலைமைகளின் ஆளுமையில் தான் தங்கியிருக்கின்றது.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**36)** பானங்கள் தயாரிக்கப் பயன்படும் வேர் எது?
1) வில்வம் வேர் 2) சாத்தாவாரி வேர் 3) வெட்டி வேர்

**37)** நிலத்தில் குப்பைகளை எரிப்பதால் இறக்கும் உயிரினம் எது?
1) மண்புழு 2) பறவைகள் 3) மீன்

**38)** தச்சன் பயன்படுத்தும் உபகரணங்களில் ஒன்று
1)  2)  3) 

**39)** கைக்குட்டையில் பூ, பூக்காம்பு என்பவற்றைத் தைப்பதற்குப் பயன்படும் தையல்
1) கம்பளித் தையல் 2) சங்கிலித் தையல் 3) அடிப்படைத் தையல்


**40)** இலங்கைக்கே உரித்தான பறவையாக அமையாதது?
1) காட்டுக்கோழி 2) சபன் கோழி 3) பச்சைக்கிளி

**41)** அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்
1) ஸ்கேவி 2) குருதிச்சோகை 3) தொண்டைக்கழலை

**42)** பின்வருவனவற்றில் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?
1) கூரிய உபகரணங்களைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்
2) பாதையின் வலது பக்கத்தால் செல்லுதல்
3) முகக் கவசம் அணிந்து செல்லுதல்

**43)** கொப்பளிப்பான் நோயின் நோய்க்காவிகள்
1) நுளம்பு 2) அசுத்தமான உணவு 3) ஆட்கள்

**44)** எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணுவதால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) சீதபேதி 3) இதய நோய்

**45)** 

படத்தில் காட்டியவாறு நீரைச் சூடாக்கும் போது உடனடிய நிகழ்வது
1) நீர் ஆவியாகும் 2) நீர் சூடாகும் 3) நீர் குறையும்

**46)** நீராவி மூலம் பெறத்தக்க பயன் எது?
1) நீரைக் குளிரச் செய்தல் 2) சோறு சமைத்தல் 3) மூலிகை அவித்தல்

**47)** மாசடைந்த நீரை நுகர்வதால் ஏற்படும் நோய் எது?
1) டெங்கு 2) ஈரலழற்சி 3) சின்னமுத்து

**48)** சேதனப் பசளையாகப் பயன்படுத்துவது
1) யூரியா 2) மாட்டெரு 3) அமோனியா

**49)** எனது பாடசாலை காலியில் அமைந்துள்ளது. எனது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1) வடமாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) தென் மாகாணம்

**50)** காந்தம் கவர முடியாத பொருள் எது?
1) குண்டூசி 2) நெகிழி 3) இரும்பாணி

**51)** பற்சில்லுகளைக் கொண்ட உபகரணம்
1) ஒற்றைச்சில்லு வண்டி 2) மின்விசிறி 3) துவிச்சக்கரவண்டி

**52)** தொடர்பாடலுக்குப் பயன்படும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம்
1) வானொலி 2) இணையம் 3) பத்திரிகை

**53)** மின்னஞ்சல் அனுப்புவதற்குத் தேவையான சாதனம் அல்லாதது
1) கணினி 2) மடிக்கணினி 3) வானொலி

**54)** சிகிரியா அமைந்துள்ள மாவட்டம் எது?
1) கண்டி 2) அநுராதபுரம் 3) மாத்தளை

**55)** பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தவர்
1) வண.எஸ்.மஹிந்த 2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 3) C.W.W.கன்னங்கரா

**56)** காற்பந்து விளையாட்டுப் போட்டியில் ஓர் அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 10 பேர் 2) 7 பேர் 3) 11 பேர்

**57)** கடதாசிகளை மடித்து உருவங்கள் அமைத்தலை எவ்வாறு அழைப்பர்?
1) கொலாஜ் 2) ஓரிகாமி 3) அலப்பறை

**58)** உடலுக்குச் சக்தி தரும் உணவு
1) பருப்பு 2) பாண் 3) வல்லாரை

**59)** குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் அசௌகரியம் அல்லாதது
1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்
2) தோல் உலர்தல்
3) சிறுநீரகங்கள் ஆரோக்கியமாதல்

**(30 புள்ளிகள்)**

**60)** பாடசாலை விடுமுறைக் காலத்தில் நான் சென்ற கல்விச் சுற்றுலா என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **36.** | 3 | **37.** | 1 | **38.** | 1 |
| **39.** | 2 | **40.** | 3 | **41.** | 3 |
| **42.** | 1 | **43.** | 3 | **44.** | 3 |
| **45.** | 2 | **46.** | 3 | **47.** | 2 |
| **48.** | 2 | **49.** | 3 | **50.** | 2 |
| **51.** | 3 | **52.** | 3 | **53.** | 3 |
| **54.** | 3 | **55.** | 2 | **56.** | 3 |
| **57.** | 2 | **58.** | 2 | **59.** | 3 |

**60.** பொருத்தமான வாக்கியங்கள்

## கல்வி tv CHANNEL-1

**01.07.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

## கல்வி tv CHANNEL - 2

**01.07.2022**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு



# பெற்றோலுடன் ஒருவர் அக்கரைப்பற்றில் கைது

*மட்டக்களப்பு, ஜூலை. 01*

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிலுள்ள பாலமுனை பிரதேசத்தில் வீடு ஒன்றை நேற்று முன் தினம் புதன்கிழமை முற்றுகையிட்டபோது, அங்கு சட்டவிரோதமாக பதுக்கி வைத்திருந்த 35 1/2 லீற்றர் பெற்றோலுடன் ஒருவரை கைது செய்துள்ளதாக அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் உளவுத்துறைக்கு கிடைத்த தகவல் ஒன்றிற்கமைய, அக்கரைப்பற்று பெரும் குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸார் குறித்த வீட்டை முற்றுகையிட்டனர்.

இதன்போது அங்கு பதுக்கி வைத்திருந்த 35 1/2 லீற்றர் பெற்றோலை மீட்டதுடன் ஒருவரை கைது செய்தனர். (அ)

# கிழக்கு பாடசாலைகள் 3 தினங்களே நடக்கும்!

## அடுத்த வாரம் முதல் நடைமுறைக்கு

**மட்டக்களப்பு, ஜூலை. 01**

**சமகால எரிபொருள் பற்றாக்குறை பிரச்சனை காரணமாக கிழக்கு மாகாணத்தில் அடுத்த வாரம் முதல் மூன்று தினங்களுக்கு பாடசாலைகளை நடத்துவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது.**

திங்கள், வெள்ளி தவிர்ந்த செவ்வாய், புதன் ,வியாழக்கிழமை ஆகிய மூன்று நாட்களும் பாடசாலைகள் வழமைபோல் நடைபெறும்.

இந்த ஆலோசனையை கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் முன்வைத்தார்.

கிழக்கு மாகாண கல்விச் செயலாளர், மாகாணக் கல்வி பணிப்பாளர், வலயக்கல்விப் பணிப்பாளர்கள் உடனான சூம் தொழில்நுட்ப கூட்டத்தில் ஆளுநர் இந்த தகவலை தெரிவித்துள்ளார்.

இத்தகவலை அந்தந்த வலய கல்விப் பணிப்பாளர்கள் அவரவர் வலயப் புலனக் குழுவில், வாட்ஸ்அப் குழுவில் அதிபர் ஆசிரியர்களுக்கு அறிவித்திருக்கிறார்கள்.

செவ்வாய், புதன், வியாழக்கிழமை நாட்களிலே ஆசிரியர்களையும் மாணவர்களையும் முழுமையாக வரவழைத்து, மாணவர்களுக்கு முழு நேரஅூசி வழங்கி, முழு அளவிலான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் .இதற்கு பெற்றோர்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று ஆளுநர் கேட்டுக் கொண்டார் .

இதேவேளை, ஆசிரியர் தொழிற்சங்கங்கள் சில பிழையான வழிநடத்தல்களை முன்னெடுக்கத் திட்டமிட்டு இருக்கின்றன. அதனை பொருட்படுத்தாமல் அதிபர்களும் ஆசிரியர்களும் இந்த விடயத்திலே ஒத்துழைக்கவேண்டும்.

முடியுமானால் மூன்று மாவட்ட அரசாங்க அதிபர்களுடன் பேசி எரிபொருள் பிரச்னையை தீர்ப்பதற்கு உதவுவதாக ஆளுநர் குறிப்பிட்டுள்ளார்.

போக்குவரத்துச் சபையின் உயர் அதிகாரிகளும் இதில் கலந்து கொண்டனர். போக்குவரத்து பிரச்னை உள்ள பாடசாலைகளுக்கு பொதுப் போக்குவரத்து நடத்துவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது .

ஜூலை மாதம் 4 ஆம் திகதி தொடக்கம் வெள்ளிக்கிழமை 8 ஆம் திகதிவரையிலான காலப்பகுதியில் இந்த மூன்று நாள் பாடசாலை இடம்பெறும்.

மேலும், அதன் பின்பு எவ்வாறு பாடசாலையை நடத்துவது என்று பின்னர் விரிவாக அறிவிக்கப்படும் என்று அந்த கூட்டத்தில் கூறப்பட்டுள்ளது. (அ)

# கதைமாமணி சிவலிங்கத்துக்கு மட்டக்களப்பில் சிலை திறப்பு



*மட்டக்களப்பு, ஜூலை. 01*

இலங்கையின் புகழ்பெற்ற கலைஞர் கலாபூசணம் கதை மாமணி மறைந்த மாஸ்டர் சிவலிங்கத்துக்கு மட்டக்களப்பில் தொழில் நுட்பக் கல்லூரிக்கு முன்னால் சிலை நிறுவப்பட்டு நேற்றுக் காலை திறந்து வைக்கப்பட்டது.

கல்லடி சிவானந்தா வித்தியாலய பழைய மாணவர்களான சிவானந்தியன் சகபாடிகள் அமைப்பினால் நிறுவப்பட்ட குறித்த சிலையை மட்டக்களப்பு மாநகர மேயர் தியாகராசா சரவணபவன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகப் பணிப்பாளர் கலாநிதி பாரதி கென்னடி, காத்தான்குடி பொலிஸ் நிலைய போதை ஒழிப்புப் பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எம்.சீ.ஜவாஹிர் உட்பட பெருமளவிலான பிரமுகர்கள் கலைஞர்கள் பலர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

மறைந்த புகழ் பெற்ற மாஸ்டர் சிவலிங்கம் மாணவர்களுக்கு கதை சொல்வதனூடாக சிறந்த சமுதாயமொன்றைக் கட்டியெழுப்பியவர்.

இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனங்களிலும் தொடர்ந்து சிறுவர் கதை சொல்லும் நிகழ்ச்சியை நடத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# பாகிஸ்தான் அரசின் புலமைப்பரிசிலுக்கு தகுதியானவர்களை இனங்காணத் தேர்வு

*மட்டக்களப்பு, ஜூலை. 01*

பாகிஸ்தான் அரசினால் வழங்கப்படும் அல்லமா இக்பால் புலமைப்பரிசில் பெற தகுதியானவர்களை தெரிவுசெய்ய நடத்தப் படும் எழுத்துப்பரீட்சை கடந்த புதன்கிழமை மட்டக்களப்பு மாவட்ட ஏறாவூர் முனீரா பாலிஹா மஹா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

பாகிஸ்தான் பல்கலைக்கழகத்தில் மருத்துவம், பொறியியல், தொழிநுட்பம் போன்ற துறைகளில் கல்வி பயில இதன் மூலம் வாய்ப்பு வழங்கப்படவுள்ளது. இதற்கான முழுச் செலவுகளும் பாகிஸ்தான் அரசினால் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த புலமைப்பரிசில் திட்டத்தின் மூலம் இலங்கையின் பல்லினங்களையும் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் கடந்த காலங்களில் பயன் பெற்றுள்ளனர் என பாகிஸ்தான் தூதரக உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்பு, குருநாகல், கண்டி போன்ற நகரங்களில் மட்டுமே இடம்பெற்று வந்த இந்த தேர்வானது வழமைக்கு மாறாக கடந்த ஆண்டு முதல் கிழக்கில் பாகிஸ்தான் உயர் கல்வி ஆணைய உயரதிகாரிகள் மற்றும் தூதரக அதிகாரிகளினால் நேரடியாக நடத்தப்படுகிறது.

இந்த பரீட்சையில் கிழக்கு மாகாணத்தின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த 150 பேரளவில் கலந்துகொண்டனர். இதனை தொடர்ந்து மாணவர்களுக்கு விளக்கமளிக்கும் நிகழ்வில் பாகிஸ்தான் தூதுவரக உயர் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டு விளக்கமளித்தனர். (அ)

# அபிவிருத்தி உதவியாளர்களுக்கு உளவளத்துணைக் கருத்தரங்கு

*அம்பாறை, ஜூலை. 01*

அரச திணைக்களங்களில் பணிபுரிந்து வரும் பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்களுக்கான ஒரு நாள் உளவளத்துணை கருத்தரங்குகள் நாடு பூராகவும் இடம்பெற்று வருகின்றன. நேற்று அம்பாறை மாவட்டம் கல்முனை பிரதேச செயலகத்தில் இணைப்பு செய்யப்பட்ட-பல்வேறு அரச திணைக்களங்களில் பல்நோக்கு அபிவிருத்தி உதவியாளர்களாக கடமையாற்றுபவர்களுக்கான உளவளத்துணை கருத்தரங்கு பல்நோக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஐ.எம் அபுல் ஹசன் தலைமையில் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.எஸ். எஸ். ஹஸன், எம்.ஏ.எப்.ரினோபா ஆகியோரின் ஒழுங்குபடுத்தலின் ஊடாக கல்முனை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இக்கருத்தரங்கில் தற்கொலை மற்றும் போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்தல் எனும் தொனிப் பொருளில் உளவளத்துணை தொடர்பில் விழிப்பூட்டல் வழங்கப்பட்டது.

இக்கருத்தரங்கில் கல்முனை பிரதேச செயலாளர் ஜெ.லியாகத் அலி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உளவளத்துணை தொடர்பாக சிறப்புரை ஒன்றினை ஆற்றினார்.

வளவாளர்களாக கல்முனை பிரதேச செயலக உளவளத்துணை அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.ஐ.ஹபீபா மற்றும் எம்.எச்.எம் இம்தீஸா ஆகியோர் கலந்து கொண்டு செயலமர்வினை நடத்தினர். (அ)

# இஸ்லாம் ஆசிரியர் போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது

## இன்று ஆசிரியர்கள் பாடசாலைக்கு செல்வர்

*அம்பாறை, ஜூலை. 01*

அம்பாறை மாவட்ட ஆசிரியர்களின் கோரிக்கைக்கிணங்க எரிபொருள் பெற்றுக்கொள்ளல் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து முன்னெடுக்கப்பட்ட பாடசாலை பகிஷ்கரிப்பைத் தற்காலிகமாகக் கைவிடுவதாக இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தங்களது உரிமையின் நிமித்தம் இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இப் போராட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கிய ஆசிரியர்களுக்கு சங்கம் தமது நன்றியைத் தெரிவித்துள்ளது.

பாடசாலை பகிஷ்கரிப்புத் தொடர் பான எமது அறிவிப்பைத் தொடர்ந்து வலயக் கல்விப் பணிப்பாளர்களுடன் ஆளுநர் நடத்திய கலந்துரையாடலில் கிழக்கு மாகாண ஆசிரியர்களுக்கு எரிபொருள்களை வழங்குவதற்கு வழி செய்வதுடன் பாடசாலை நாட்களை மூன்றாகக் குறைப்பதெனவும் அறிவித்துள்ளார்.

இதனை வலயக் கல்விப்பணிப்பாளர்கள் உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளனர்.

வலயக் கல்விப் பணிமனை உயர் அதிகாரிகளும் இதற்கான உறுதி மொழிகளை எழுத்து மூலம் வழங்கியுள்ளனர்.

இவ்வாறான சாதகமான சூழ்நிலையொன்று ஏற்படும்போது பகிஷ்கரிப்பைக் கைவிடுவதன் அவசியத்தை வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மட்டத்திலும் வலியுறுத்தப்பட்டதன் நிமித்தம் இன்று வெள்ளிக்கிழமை முதல் பாடசாலைக்குச் செல்வதற்கான அழைப்பை விடுப்பதென சங்கத்தின் உயர்பீடம் தீர்மானித்துள்ளது

போராட்டங்கள் என்பது யாரையும் எதிர்ப்படுத்துவதல்ல. எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கான கதவுகளைத் திறக்க வைப்பதே. அவ்வகையில் ஆசிரியர்களது பிரச்னைகள் தொடர்பில் அதிகாரிகளின் காதுகளை எட்டச் செய்யப்பட்ட அனைத்து ஆசிரியர்களுக்கும் நமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்விடயம் தொடர்பில் ஆளுநரின் கவனத்திற்குக் கொண்டு வந்த மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் அம்பாறை மாவட்ட கல்வி வலயங்களின் பணிப்பாளர்களுக்கும் இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம் தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிங்கப்பூரில் 3 மாதங்களின் பின் உச்சத்தை தொட்டது கொரோனா!

சிங்கப்பூர் சிற்றி, ஜூலை 01

**சிங்கப்பூரில் தினசரி கொரோனா தொற்று 3 மாதங்களில் இல்லாத அளவு புதிய உச்சத்தைத் தொட்டுள்ளது.**

கடந்த 24 மணி நேரத்தில் மட்டும் அங்கு 11,504 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து சுகாதாரத் துறை அமைச்சர் ஆங் யே குங் கூறுகையில், கொரோனாவில் புதிய அலை எதிர்பார்த்ததற்கு முன்பே எழுந்துவிட்டதாகத் தெரிவித்தார். நாட்டில் தின சரி கொரோனா பாதிப்பு இனி வரும் நாள்களில் மேலும் அதி கரிக்கக்கூடும் என்று துணை பிரதமர் லாரன்ஸ் வாங் எச்ச ரித்தார்.

எனினும், இப்போதைக்கு கொரோனா கட்டுப்பாடுகளை



கடுமையாக்க வேண்டிய தேவையில்லை எனவும் நோய்த்தடுப்பு விதிமுறைகளில் தேவைப்படும் நேரங்களில் உரிய மாற்றங்கள் செய்யப்படும் எனவும் அவர் கூறினார்.

ஒமிக்ரோன் வகை கொரோனாவின் பிஏ.4 மற்றும் பிஏ.5 துணை ரகங்கள் காரணமாக அந்த நோய் பரவல் திடீரென தீவிரமடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார். புதிதாக கொரோனா உறுதி செய்யப் பட்டவர்களில் 10,732 பேருக்கு சமூக பரவல் மூலம் அந்த நோய் பரவியுள்ளது. 772 பேர் வெளி நாடுகளிலிருந்து வந்தவர்கள் ஆவர். மேலும் கொரோனா பாதிப்பால் மேலும் ஒருவர் உயிரிழந்ததைத் தொடர்ந்து, நாட்டில் ஒட்டுமொத்த கொரோனா மரணங்களின் எண்ணிக்கை 1,410ஆக உயர்ந் துள்ளது. அங்கு இதுவரை 14,25,171 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# எதிர்ப்பை கைவிட்ட துருக்கி!

அங்காரா, ஜூலை 01

சுவீடன் மற்றும் பின்லாந்து நாடுகள் நேட்டோவில் இணைவதற்கு எதிரான தனது நிலைப்பாட்டை கைவிடு வதாக துருக்கி ஜனாதிபதி ரெசெப் தையிப் எர்டோகன் அறிவித்துள்ளார்.

இதனால் சுவீடன் மற்றும் பின் லாந்து ஆகிய இரு நாடுகளும் நேட் டோவில் இணைவதில் துருக்கி போட்டு வந்த முட்டுக்கட்டை நீங்கியுள்ளது.

நேட்டோ உறுப்பு நாடுகளாக சுவீடன் மற்றும் பின்லாந்து இணைவ தற்கு துருக்கி எதிர்ப்பு தெரிவித்து வந் தது. இந்நிலையில், ஸ்பெயின் - மேட் ரிட் நகரில் நேற்று நடந்த தலைவர் களுடனான கூட்டத்தில், நேட்டோ வில் இவ்விரு நாடுகளும் இணைவதற் கான ஆலோசனைகள் மேற்கொள்ளப் பட்டன.

இதில் தொடர்புடைய நாடுகளின் தலைவர்கள் பேச்சுவார்த்தையில் ஈடு பட்டனர். இதனை தொடர்ந்து, துருக்கி தனது எதிர்ப்பு நிலைப்பாட்டை கைவிட்டது. இதனை துருக்கியின் ஜனாதிபதி ரெசெப் தையிப் எர்டோ கன் வெளியிட்டார்.

இதனால், நேட்டோ உறுப்பினர் களாக சுவீடன் மற்றும் பின்லாந்து ஆகிய இரு நாடுகள் இணைவதில் இருந்த துருக்கியின் எதிர்ப்பு விலகி யது. இதற்கான முத்தரப்பு நாடுகளுட னான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட் டது.

இவ்வாறான நிலையில் சுவிடன், பின்லாந்து நாடுகள் நேட்டோவில் இணைவதற்கு இதுவரை இருந்துவரை தடை நீங்கியதை அமெரிக்க ஜனாதி பதி ஜோ பைடன் வரவேற்றார்.

துருக்கி தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டதற்காக பைடன் பாராட்டு தெரிவித்தார். (அ)

# நைஜீரியாவில் ஓடும் பஸ் தீப்பற்றி 5 பேர் கருகி பலி!

## 9 பேர் காயம்




நைஜீரியாவின் தென்மேற்கு பிராந்தியத்தில் மூன்று மாநிலங்களை இணைக்கும் லாகோஸ்-இபாடான் நெடுஞ்சாலையில் நேற்று முன் தினம் புதன்கிழமை பஸ் ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்ததில் அதற்குள் இருந்த 5 பேர் தீயில் கருகி பலியாகினர். மேலும் ஒன்பது பேர் காயமடைந்தனர்.

நெடுஞ்சாலையின் ஒருள் நடைபாதை யில் உள்ள ஓகெரே நகரில் தீ விபத்து இடம்பெற்றது.

பஸ் ஓடிக்கொண்டு இருந்தபோது இயந்திரப் பகுதியில் இருந்து தீ பரவி, பஸ் முழுவதும் வேகமாகப் பரவியதாக தெற்கு மாநிலமான ஒகு னில் உள்ள கூட்டாட்சி வீதி பாதுகாப்புப் படை யின் கட்டளை அதிகாரி அகமது உமர் தெரிவித்தார்.

இறந்த 5 பேரின் உடல்களிலும் பலத்த தீ காயங்கள் உள்ளன. தீ பரவி யதாலும், ஓடும் பஸ்ஸில் இருந்து குதித்தாலும் 9 பேர் காயமடைந்தனர் எனவும் அவர் கூறினார்.

சாரதிகள் வாகனங்களை வெளியே எடுக்கும்போது, அது வீதியில் பயணம் செய்வதற்கு ஏற்ற வகையிலும் மற்றும் பயணிகளுக்கு பாதிப்பு எதுவும் ஏற்படாத வகையிலும் சரியான தகுதி நிலையில் உள்ளதா? என்பதை அனைத்து நேரங்களிலும் உறுதி செய்து கொள்ள வேண்டும் எனவும் ஒகுனில் உள்ள கூட்டாட்சி வீதி பாதுகாப்புப் படையின் கட்டளை அதிகாரி அகமது உமர் அறிவுறுத்தியுள்ளார். (அ)

# பிரிட்டிஷ் கொலம்பியாவில் வங்கிக்குள் இரண்டு ஆயுததாரிகள் சுட்டுக்கொலை!

## 6 பொலிஸார் காயம்

ஒட்டாவா, ஜூலை. 01

கனடா - பிரிட்டிஷ் கொலம்பியா மாகா ணம் - வான்கூவர் தீவில் உள்ள வங்கி ஒன்றுக் குள் புகுந்த ஆயுததாரிகள் இருவர் பொலிஸா ரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். ஆயுததாரி களுடன் இடம்பெற்ற மோதலில் பொலிஸார் 6 பேர் காயமடைந்தனர்.

வான்கூவர் - சானிச் நகரில் உள்ள தனியார் வங்கி ஒன்றுக்குள்ளேயே நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை ஆயுததாரிகள் நுழைந்த னர். இதன்போது அங்கு ஏராளமான வாடிக்கை யாளர்களும் இருந்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

வங்கிக்குள் ஆயுததாரிகள் புகுந்த தகவல் கிடைத்ததும் பொலிஸார் உடனடியாக சம் பவ இடத்துக்கு விரைந்தனர். அவர்கள் வங்கியை சுற்றிவளைத்து தங்களின் பாதுகாப்பு வளையத் துக்குள் கொண்டு வந்தனர். பின்னர் அவர்கள் வங்கிக்குள் ஆயுதங்களுடன் புகுந்த ஆயுததாரி களை சரணடையுமாறு எச்சரித்தனர்.

எனினும் சரணடைய மறுத்த ஆயுததாரிகள் பொலிஸாரை நோக்கி சரமாரியாக துப்பாக் கியால் சுட்டனர். பதிலுக்கு பொலிஸாரும் அவர்களை நோக்கிச் சுட்டனர். இரு தரப்பிலும் கடுமையான துப்பாக்கிச் சண்டை நடைபெற்றது.

பல மணி நேரம் நீடித்த இந்த துப்பாக்கி சண்டையைத் தொடர்ந்து வங்கிக்குள் ஆயுதங்களு டன் புகுந்த 2 பேரும் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

மோதலில் காயமடைந்த பொலிஸார் 6 பேரும் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்ட னர்.

இதனைத் தொடர்ந்து ஆயுததாரிகள் வந்த காரை பொலிஸார் பரிசோதனை செய்தபோது அதில் வெடிகுண்டு இருப்பது தெரியவந்தது.




இதனால் பதற்றம் உருவானது. இதையடுத்து முன் னெச்சரிக்கை நடவடிக்கையாக வங்கி அருகே வசிக்கும் பொதுமக்கள் வீடுகளில் இருந்து வெளியேற்றப்பட்டனர். பின்னர் வெடிகுண்டு நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு அந்த வெடி குண்டு செயலிழக்க வைக்கப்பட்டது.

வங்கிக்குள் புகுந்த கவச உடை அணிந்திருந்த 2 பேர், அதிக ஆயுதங்களை வைத்திருந்தனர். பெரிய அளவில் அசம்பாவிதங்கள் நிகழ்வதற்குள் அவர்கள் கொல்லப்பட்டனர் என வான்கூவர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சுட்டுக்கொல்லப்பட்ட ஆயுததாரிகள் குறித்த எந்த தகவலையும் பொலிஸார் வெளியிட வில்லை. அவர்கள் வங்கியில் கொள்ளையடிக்கும் நோக்கில் புகுந்தார்களா? அல்லது தீவிரவாத தாக் குதல் நடத்தும் நோக்கத்தில் நுழைந்தார் களா? என்கிற பல்வேறு கோணங்களில் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர். (அ)

# சுவீடன், பின்லாந்துக்கு ரஷ்யா கடும் எச்சரிக்கை

மொஸ்கோ, ஜூலை. 01

சுவீடன் மற்றும் பின்லாந்து நாடுகள் அமெரிக்கா தலை மையிலான நேட்டோ கூட்ட ணியில் இணைந்து துருப்புக் கள் மற்றும் இராணுவக் கட்டமைப்புகளை எல்லையில் நிலை நிறுத்தினால் அதற்கு உரிய எதிர்வினை ஆற்றப்படும் என ரஷ்யா ஜனாதிபதி விளா டிமிர் புடின் தெரிவித்தார்.

உக்ரைனுடன் உள்ள பிரச்சினை போன்று சுவீடன் மற்றும் பின்லாந்துடன் எங்களுக்கு எந்தப் பிரச்னையும் இல்லை. ஆனால் அவர்கள் நேட்டோவில் இணைய விரும் புகிறார்கள் என முன்னாள் சோவியத் மாநிலமான துர்க் மெனிஸ்தான் தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தைக்கு பின்னர் புடின் தெரிவித்தார்.

தற்போது வரை ரஷ்யாவால் எந்த அச்சுறுத்தலும் இல்லை என்பதை சுவிடன் மற்றும் பின்லாந்து நாடுகள் புரிந்து கொள்ளவேண்டும். ஆனால் இரு நாடுகளும் நேட்டோவில் இணைந்து துருப்புக்கள் மற் றும் இராணுவக் கட்டமைப்பு களை எல்லையில் நிலை நிறுத்தினால் அது எங்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கும்.



அதன் பின்னர் அதே அச்சுறுத் தல்களை அவர்களும் எதிர் கொள்ள நேரிடும் என்று புடின் கூறினார்.

நேட்டோவில் சுவீடன் மற்றும் பின்லாந்து நாடுகளு டன் இணைந்தால் அந்த நாடுகளுடன் ரஷ்யாவுக்கு உள்ள உறவுகள் மோசமடை வது தவிர்க்க முடியாததாகி விடும் எனவும் அவர் தெரிவித் தார்.

உக்ரைன் மீதான ரஷ்யா வின் போரின் நோக்கம் கிழக்கு உக்ரைனின் டான்பாஸ் பகு தியை விடுவிப்பது மற்றும் ரஷ் யாவின் பாதுகாப்பை உறுதி செய்வது மட்டுமே ஆகும் எனவும் புடின் கூறினார்.(அ)



## விம்பிள்டன் ரென்னிஸ் நடால் 2ஆவது சுற்றில்!

*லண்டன், ஜூலை 01*

*கிராண்ட்ஸ்லாம் போட்டியான விம்பிள்டனில் ஸ்பெயினின் ரபேல் நடால் 2ஆவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.*

*உலகின் 2ஆம் நிலை வீரரான நடால் முதல் சுற்றில் **6-4, 6-3, 3-6, 6-4** என்ற செற்களில் ஆர்ஜென்ரீனாவின் பிரான்சிஸ்கோ செருண்டோலாவை தோற்கடித்தார்.*

*அடுத்த சுற்றில் லிதுவேனியாவின் ரிகார்டஸ் பெராகின்ஸை எதிர்கொள்கிறர் நடால்.*

*மற்றொரு போட்டியில் தரவரிசையில் 4ஆம் இடத்திலிருக்கும் கிரீஸின் ஸ்டெபானோஸ் சிட்சிபாஸ் **7-6 (7/1), 6-3, 5-7, 6-4** என்ற செற்களில் அலெக்ஸாண்டர் ரிட்ஸ்கார்டை வீழ்த்தினார்.*



## இங்கிலாந்துடனான டெஸ்ட் இன்று! இந்திய அணியின் தலைவராக பும்ரா

*புதுடில்லி, ஜூலை 01*

*இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இந்திய அணியை வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா அணித் தலைவராக வழிநடத்தவுள்ளார்.*

*ரோஹித் சர்மாவுக்கு கரோனா தொற்று காரணமாக அவர் இந்த டெஸ்ட் போட்டியில் விளையாட வாய்ப்பு இல்லை என்றும் தெரிய வருகின்றது.*

*இந்திய கிரிக்கெட் அணி இங்கிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு ஒரே ஒரு டெஸ்ட் போட்டி, 3 இருபது 20 மற்றும் 3 ஒருநாள் கிரிக்கெட் தொடர்களில் விளையாடவுள்ளது.*

*இந்த தொடரில் இந்திய அணியின் பிரதான வீரர்கள் விளையாடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்நிலையில், இந்த சுற்றுப்பயணத்தில் இந்திய அணி முதலாவதாக டெஸ்ட் போட்டியில் விளையாடுகிறது. இன்று வெள்ளிக்கிழமை இந்த போட்டி தொடங்குகிறது.*

*அணித் தலைவர் ரோஹித் சர்மாவுக்கு கொரோனா தொற்று உறுதியாகி உள்ள காரணத்தால் அவர் இந்த போட்டியில் விளையாடுவதில் சிக்கல் நீடித்து வருகிறது. இதனால், இந்திய அணியை பும்ரா வழிநடத்துவார். இன்னமும் உத்தியோகபூர்வமாக இந்தத் தகவல் உறுதிப்படுத்தப்படவில்லை.*

*இது நடக்கும் பட்சத்தில், சுமார் 35 ஆண்டுகளுக்கு பிறகு வேகப்பந்து வீச்சாளரான பும்ரா இந்திய அணியை டெஸ்ட் போட்டியில் வழிநடத்தியவர் என்ற பெருமையைப் பெறுவார்.* (ஐ)

# இலங்கையுடனான டெஸ்ட் முன்னிலை பெற்றது ஆஸி.!



*காலி, ஜூலை 01*

*இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் முதல் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடும் அவுஸ்திரேலிய அணி முன்னிலை பெற்றுள்ளது. இரண்டாவது நாளில் துடுப்பெடுத்தாடிய அந்த அணி தேநீர் இடைவேளையின் போது 5 விக்கெட்கள் இழப்புக்கு 234 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.*

*நேற்று முன்தினம் காலியில் தொடங்கிய இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.*

*இலங்கை அணிக்கு நிரோசன் திக்வெல்ல மட்டுமே பொறுப்பாக ஆடி அரைச்சதம் கடந்தார். 6 பௌண்ட்ரிகளுடன் அவர் பெற்ற 58 ஓட்டங்களே இலங்கை அணியின் சார்பில் பெறப்பட்ட அதி கூடிய ஓட்டமாக அமைந்தது.*

*இதேபோல, அனுபவ வீரரான அஞ்சலோ மத்தியூஸ் 39 ஓட்டங்களை நிதானமாக ஆடி எடுத்தார்.*

*தொடக்க வீரர்களும் ஓரளவுக்கு தாக்குப்பிடித்திருந்தனர். பதும் நிசங்க 23, திமுத் கருணாரத்ன 28 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர்.*

*59 ஓவர்கள் மட்டுமே தாக்குப் பிடித்த இலங்கை அணி சகல விக்கெட்களையும் இழந்து 212 ஓட்டங்களை எடுத்தது.*

*அவுஸ்திரேலிய அணியின் பந்துவீச்சில் நதன் லயன் 5 விக்கெட்களையும், மிற்செல் ஸ்வெப்சன் 3 விக்கெட்களையும் கைப்பற்றினர்.*

*பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணிக்கு உஸ்மான் கவாஜா, டேவிட் வோர்ணர் தொடக்கம் கொடுத்தனர். வோர்ணர் 25, அடுத்து வந்த லபுசாக்னே 13,, ஸ்ரீவன் ஸ்மித் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.*

*25 ஓவர்களில் 3 விக்கெட்களை இழந்து 98 ஓட்டங்களை அவுஸ்திரேலியா பெற்றிருந்தபோது முதல் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. உஸ்மான் கவாஜா 47, ட்ராவிஸ் ஹெட் 6 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர்.*

*நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் தொடங்கியபோது, தனஞ்சய டீ சில்வாவின் பந்தில் அவரிடமே பிடிகொடுத்து ஆட்டமிழந்தார் ஹெட்.*

*எனினும், பின்னர் வந்த கமரூன் கிறீன் நிலைத்து ஆடினார். உஸ்மான் கவாஜாவும் தொடர்ந்து தனது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். இதனால், ஆஸி. அணியின் ஓட்ட எண் ணிக்கை உயரத் தொடங்கியது. இந்நிலையில், கவாஜா வெண்டர்சேயின் பந்தில் நிசங்க விடம் பிடி கொடுத்து 71 ஓட்டங் களுடன் ஆட்டமிழந்தார். பின்னர் வந்த அலெக்ஸ் காரியும் சிறப்பாக ஆடினார்.*

*இந்நிலையில், நேற்று ஆட்டம் மாலைநேர தேநீர் இடைவேளைக்காக நிறுத்தப்பட்டபோது, ஆஸி. அணி 5 விக்கெட்களை இழந்து 254 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இது இலங்கை அணி முதல் இனிங்ஸில் பெற்ற ஓட்டத்தையும் விட 22 ஓட்டங்கள் அதிகமாகும்.*

*அச்சமயம், கமரூன் கிறீன் 15, அலெக்ஸ் காரி 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.*

*இதேசமயம், இலங்கையின் பந்துவீச்சில் ரமேஷ் மெண்டிஸ் 3 விக்கெட்களையும், தனஞ்சய டீ சில்வா, வெண்டர்ஷே ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றியிருந்தனர்.* (ஐ)

# வோர்ணரின் அபார களத்தடுப்பு

*காலி, ஜூலை 01*

இலங்கை - அவுஸ்திரேலிய அணிகள் காலியில் மோதிவரும் முதல் டெஸ்ட் போட்டியில் முதல் நாள் ஆட்டத்தில் கருணாரதனவுக்கு எதிராக ஆஸி. வீரர்கள் எல்லோரும் எல். பி. டபிள்யூ கோரிக்கை முனவைத்தபோது, வோர்ணர் மட்டும் கருணாரத்னவின் துடுப்பில் பட்டு வந்த பந்தை இலாவகமாக பிடியெடுத்து ஆட்டமிழக்க செய்தார்.

*இலங்கை அணி துடுப்பெடுத்தாடியபோது 30ஆவது ஓவரை நதன் லயன் வீசினார். அந்த ஓவரின் இரண்டாவது பந்தை அணித் தலைவர் கருணரத்ன எதிர்கொண்டார். ரவுண்ட் தி விக்கெட்டாக அந்த பந்தை லயன் வீசியிருந்தார். அதை முன் நகர்ந்து ஆட முயன்றார் கருணரத்ன. ஆனால், பந்து அவரின் துடுப்பில் பட்டு உள்பேக்கமாக எழுந்து, பின்னர் கால் தடுப்பில் பட்டு மீண்டும் துடுப்பில் எட்டு ஸ்லிப் திசையாக பறந்தது. இந்தச் சமயத்தில் ஆஸி வீரர்கள் அனைவரும் எல் . பி. டபிள்யூ ஆட்டமிழப்பை கோரினர்.*

ஆனால், தனது திசையில் வந்த பந்தை பாய்ந்து இலாவகமாக பிடியெடுத்து கருணாரத்னவை ஆட்டமிழக்க செய்தார் டேவிட் வோர்ணர்.



# அம்புலன்ஸ் வாகனங்களுக்கு எரிபொருள் கிடைக்கவில்லை

## ஆபத்தான நிலையில் நோயாளிகள்

**கொழும்பு, ஜூலை 01**

**காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் தற்போது 15 அம்பியுன்ஸ் வாகனங்களுக்கு போதிய எரிபொருள் இல்லை என கராப்பிட்டிய போதனா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

இதனால், ஆபத்தான நிலையில் உள்ள நோயாளிகளை வேறு மருத்துவமனைகளுக்கு மாற்றவோ, அவசர காலத்தில் 15 அம்புலன்ஸ் வாகனங்கள் சேவையை வழங்கவோ முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என மருத்துவமனை ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

அம்புலன்ஸ் சேவை அத்தியாவசிய சேவையாக அறிவிக்கப்பட்டுள்ளபோதிலும் எரிபொருள் கிடைப்பது பாரிய பிரச்னையாக மாறியுள்ளதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அம்புலன்ஸ் வாகனங்களை எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு கொண்டு செல்லும்போது, வரிசையில் நிற்பவர்கள் எரிபொருள் வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததாக காலி கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையின் அம்புலன்ஸ் வாகன சாரதி ஒருவர் தெரிவித்தார். (அ)

# தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டுப் பொலிஸார் தற்கொலை!

கொழும்பு, ஜூலை 01

உப பொலிஸ் பரிசோதகர் ஒருவர், தன்னைத்தானே துப்பாக்கியால் சுட்டு, உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் கடவத்த - கோனஹேன பொலிஸ் விசேட அதிரடிப் படை முகா மில் நேற்றுக் காலை இடம் பெற்றுள்ளது.

மேற்படி முகாமின் ஆயுதக் களஞ்சியப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றி வந்த அதிகாரியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

59 வயதான குறித்த உப பொலிஸ் பரிசோதகர், கடுவலை - ஜல்தர பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்துள்ளது.

உயிரிழப்புக்கான காரணம் இதுவரை வெளியவராத நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# முப்படைகள் வசமானது எரிபொருள் விநியோகம்!

கொழும்பு, ஜூலை 01

அரசாங்கத்தின் அறிவுறுத்தலுக்கு இணங்க இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் நேற்று முன் தினம் எரிபொருள் விநியோகத்தை முப்படை, பொலிஸ் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபைக்கு வழங்கத் தீர்மானித்துள்ளது.

இந்த சமீபத்திய நடவடிக்கை தொடர்பாக பாதுகாப்புப் படையினருக்கு விளக்கமளித்ததாகவும், இந்த முறை நேற்று முதல் நடைமுறைக்கு வந்தது எனவும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் இந்த அண்மைய உத்தரவின்படி, மறு அறிவிப்பு வரும் வரை இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துடன் இணைக்கப்பட்ட எந்த நிரப்பு நிலையத்திலிருந்தும் எரிபொருள் இருப்புக்கள் வழங்கப்படாது.

அத்தியாவசிய சேவைகளுக்கான தங்கள் அடையாளத்தை நிரூபித்த பின்னர் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திடம் இருந்து எரிபொருளைப் பெற முடியும் என்று அவர் மேலும் கூறினார். (அ)

# பெருளாதார நெருக்கடிக்கு எதிராக வவுனியாவில் கையெழுத்து வேட்டை

வவுனியா, ஜூலை. 01

வவுனியாவில் பொருளாதார நெருக்கடிக்கு எதிராக கையெழுத்து சேகரிப்பு நடவடிக்கை இலுப்பையடிச் சந்தியில் முன்னெடுக்கப்பட்டது.

குறித்த நடவடிக்கை சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினரினால் முன்னெடுக்கப் பட்டது.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண கோரி, பட்டினிச் சாவைத் தடுக்க மக்களே முன் வாரீர் எனும் தொனிப்பொருளில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக 25 ஆயிரம் பேரின் கையெழுத்து பெறும் நோக்கில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.



இதன் முதற்கட்டமாக நேற்று வவுனியா இலுப்பையடிச் சந்தியில் கையேழுத்து சேகரிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இந்த நடவடிக்கையில் இன, மொழி பேதங்களுக்கு அப்பால் பல மக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு கையேழுத்திட்டிருந்தனர். (அ)

# 100 000 மெற்றிக் தொன் எரிவாயு கொள்வனவு ஒப்பந்தத்தில் லிட்ரோ நிறுவனம் கைச்சாத்து

கொழும்பு, ஜூலை 01

ஒரு லட்சம் மெற்றிக் தொன் சமையல் எரிவாயுவை பெற்றுக் கொள்வதற்கான ஒப்பந்தத்தில் நிதி அமைச்சின் கீழ் உள்ள லிட்ரோ எரிவாயு நிறுவனம் நேற்று கைச்சாத்திட்டுள்ளது.

இந்த கொள்வனவுக் கட்டளையின் மொத்த விலை 90 மில்லியன் அமெரிக்க டொலர்கள்.

உலக வங்கி 70 மில்லியன் டொலர் நிதியுதவி அளித்துள்ளது. மீதமுள்ள 20 மில்லியன் டொலர்களை லிட்ரோ வழங்கியுள்ளது.

இந்த இருப்பு நான்கு மாதங்களுக்கு நாட்டிற்கு வழங்க போதுமானதாக இருக்கும் என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

எரிவாயு கையிருப்பில் 70 சதவீதம் உள்நாட்டு நுகர்வோருக்கு வழங்கப்படும். இவற்றில் 12.5 கிலோ எடையுள்ள 5 மில்லியன் சிலிண்டர்களும், 5 கிலோ எடையுள்ள ஒரு மில்லியன் சிலிண்டர்களும், 2.5 கிலோ எடையுள்ள ஒரு மில்லியன் சிலிண்டர்களும் தயாரிக்கப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மீதமுள்ள 30 சதவீத எரிவாயு சிலிண்டர்கள் வணிக பயன்பாட்டிற்கு வழங்கப்படும்.

லிட்ரோவினால் 20 மில்லியன் டொலர்கள் செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 33 ஆயிரம் தொன் சமையல் எரிவாயு ஆரம்பத் தொகுதி ஜூலை முதல் வாரத்தில் இலங்கைக்கு வந்தடையும். அந்த தொகுதி விநியோகம் உடனடியாக ஆரம்பிக்கப்படும் என்று பிரதமர் அலுவலகம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# தூக்கிலிடப்பட்ட ஓட்டோ!

கொழும்பு, ஜூலை 01

எரிபொருள் பெற வரிசையில் நிறுத்தி வைக்கப்படும் வாகனங்களின் பாகங்கள் மற்றும் எரிபொருள் என்பவற்றை திருடுவதற்காக திருட்டுக் கும்பல்களால் பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் ஓட்டோவை ராஜிகிரிய, ஒபேசேகரபுர பிரதேச வாசிகள் இணைந்து மின் கம்பத்தில் கட்டித் தொங்கவிட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

சந்தேக நபர்கள் குறித்த ஓட்டோவில் வந்து அவற்றை வரிசையில் நிறுத்திவிட்டு, அதே வரிசையில் நிற்கும் வாகனங்களின் பாகங்களை திருடி வந்ததாக குற்றஞ்சாட்டப்படுகின்றது.

அத்துடன், வாகனங்களில் எஞ்சியிருக்கும் சிறிதளவு பெற்றோலைக்கூட இவர்கள் திருடி வந்ததாக பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆண்டு ஜூன் தொடக்கத்தில் இருந்து எரிபொருள் வரிசைகளில் திருட்டுச் சம்பவங்கள் கணிசமாக அதிகரித்துள்ளன. எரிபொருள் நிரப்பும் நிலையங்களுக்கு வெளியே எரிபொருள் வருகையை எதிர்பார்த்து நாட்கணக்கில் மக்கள் தங்கள் வாகனங்களை வரிசையில் நிறுத்தி வைத்திருக்கும் நிலையில் அந்த வாகனங்களின் பாகங்கள் திருடப்பட்டு வருவதாக பல முறைப்பாடுகள் செய்யப்பட் டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)





# எரிபொருள் நிலையம் அருகே மோசடிகளில் ஈடுபடும் பொலிஸார் மீது கடும் நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 01

பெற்றோல் நிலையங்களுக்கு அருகில் முறைகேடுகளில் ஈடுபடும் பொலிஸ் அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபரினால் பொலிஸ் உயர் அதிகாரிகள் உள்ளிட்ட பொலிஸ் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்றறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் கடமையில் இருக்கும் குறிப்பிட்ட சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் கடமையில் இல்லாத சில பொலிஸ் உத்தியோகத்தர்கள் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபடுவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்த பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

சில பொலிஸ் அதிகாரிகள் மக்களிடம் பணம் பெற்றுக் கொண்டு எரிபொருளை இலகுவாக பெற்றுக்கொள்வதற்கு உதவி செய்வதாகவும் குற்றச் சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், எரிபொருளை சேகரித்து சிலர் அதனை அதிக விலைக்கு விற்பனை செய்வதாகவும், அதனை விற்பனை செய்யும் குறிப்பிட்ட நபர்களிடம் பணம் பெற்றுக் கொண்டு உதவி செய்வதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளதாக பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கமைய எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அருகில் இருந்து பணத்தினை பெற்றுக்கொண்டு எளிதில் எரிபொருளை பெற்றுக்கொள்ள அனுமதிக்கும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யுமாறு பொலிஸ்மா அதிபர் தனது சுற்றறிக்கையில் பணிப்புரை விடுத்துள்ளார். (அ)

## அரசாங்கத்துக்கு...

யிரத நிலையத்துக்கு அருகில் நேற்று மாலை 4 மணியளவில் ஆரம்பமானது.

சுமார் ஒரு மணித்தியாலம் புறக் கோட்டை பகுதியில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்ட நிலையில், எதிர்க் கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ உட்பட அந்தக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் இதில் இணைந்து கொண்டனர்.

எதிர்க்கட்சித் தலைவரின் உரையைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்ற வர்கள் பேரணியாக ஜனாதிபதி மாளி கையை நோக்கிச் சென்றனர்.

புறக்கோட்டை - செத்தம் வீதியூடாக பேரணியாக நகர்ந்த போராட்டக்காரர் கள் ஜனாதிபதி மாளிகையைச் சென்ற டைய முயன்றனர். ஆனால், அந்த வீதியில் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் தடுப்பரண்களை ஏற்படுத்தி போராட்டக்காரர்களை அப்பகுதிக்குள் நுழைய விடாமல் செய்தனர். இதே போன்று, ஒல்கொட் வீதி, புறக்கோட்டையிலிருந்து தாமரை தடாக சந்தி வரையான வீதி என்பவையும் மூடப்பட்டிருந்தன.

இதனால் இந்த வீதிகளின் ஊடான போக்குவரத்துக்கள் சுமார் 2 மணித்தியாலங்களுக்கு மேல் தடைப்பட்டன.

முன்னதாக போராட்டக்காரர்கள் சில பகுதிகளுக்குள் நுழைவதற்கு நீதிமன்றம் தடை விதித்திருந்தது. இதற்கமைய நேற்று பிற்பகல் 3 மணி முதல் மாலை 6 மணி வரை கோட்டை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட என்.எஸ்.ஏ. சுற்றுவட்டத்திலிருந்து சைத்திய வீதி, ஜனாதிபதி மாவத்தை, செரமிக் சந்தியிலிருந்து யோர்க் வீதி, பஸ்தியன் வீதியிலிருந்து முதலிகே வீதி வரை, வைத்தியசாலை வீதி, வங்கி வீதி, பாரோன் ஜயதிலக வீதி, செத்தம் வீதி, கெனல் வீதி உள்ளிட்ட பகுதிகளுக்குள் பிரவேசிப்பதற்கும் பொது சொத்துக்களுக்கு சேதம் விளைவிக்கும் வகையில் செய்படுவதற்கும் தடை விதிக்கப்பட்டிருந்தது.

குறித்த நீதிமன்ற உத்தரவுக்கமைய குறித்த வீதிகளில் வீதித்தடைகள் அமைக்கப்பட்டிருந்தன. இதனால் எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ உள்ளிட்டவர்கள் வீதித் தடைகளின் மீதேறி தமது எதிர்ப்புக்களை வெளிப்படுத்தினர். (ஐ)

## இலங்கைக்கு...

நாட்டின் பொருளாதார நெருக்கடி குறித்து நேரடியாக ஆய்வு செய்தவற்காக சர்வதேச நாணய நிதியத்தின் குழு கடந்த 20ஆம் திகதி இலங்கை வந்தது. இந்தக் குழு தனது பணிகளை முடித்துக் கொண்டு நேற்றுப் புறப்பட்டது. இதன் போது, அறிக்கை ஒன்றையும் வெளியிட்டது. அதிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

மேலும், எதிர்காலத்தில் விரிவாக்கப் பட்ட நிதி வசதி தொடர்பான ஊழியர் அளிவிலான ஒப்பந்தத்தை எட்டுவது தொடர்பான பேச்சு தொடரும். பொதுக் கடன் நீடிக்க முடியாதது என மதிப்பிடப்படுவதால், நாணய நிதியத்தின் நிர்வாக சபையின் ஒப்புதலுக்கு கடன் நிலைத்தன்மையை மீட்டெடுக்கும். இதற்கு இலங்கையிடமிருந்து போதுமான நிதியுதவி உத்தரவாதம் தேவைப்படும்.

இந்தப் பின்னணியில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை சரிசெய்யவும், பொதுக் கடன் நிலைத்தன்மையை மீட்டெடுக்கவும் இலங்கையின் வளர்ச்சி திறனை உணர்ந்து கொள்ளவும் ஒரு விரிவான பொருளாதார வேலைத்திட்டத்தை வடிவமைப்பதில் கலந்துரையாடல்கள் கவனம் செலுத்தின.

ஏழைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்களுக்கு போதுமான பாதுகாப்பை உறுதிசெய்யும் அதேவேளை, உயர்த்தப்பட்ட நிதிப் பற்றாக்குறையை குறைக்க வேண்டியதன் அவசியம் உட்பட பணியின்போது கணிசமான அளவில் விவாதங்கள் இடம்பெற்றன.

வருவாய்கள் குறைவாக இருப்பதால் வரி சீர்திருத்தங்கள் அவசர தேவை அதிகரிக்கும். பணவீக்கத்தை கட்டுப்படுத்தல், கடுமையான கட்டண சமநிலை அழுத்தங்களை நிவர்த்தி செய்தல், ஊழல் பாதிப்புகளை குறைத்தல் மற்றும் வளர்ச்சியை மேம்படுத்தும் சீர்திருத்தங்களை மேற்கொள்ளல் ஆகியவை இலங்கை எதிர்கொள்ளவேண்டிய மற்ற சவால்கள்.

இந்த ஆண்டு பொருளாதாரம் கணிசமாக சுருங்கும் அதேவேளை, பணவீக்கம் அதிகமாக உயரும். மிகக்குறைந்த வெளிநாட்டு கையிருப்பு அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதியை தடை செய்துள்ளது. இதனால், ஏழைகள் எதிர்கொள்ளும் கஷ்டங்களை சர்வதேச நாணய நிதியக் குழு நேரடியாகக் கண்டது.

இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான எங்களின் உறுதிப்பாட்டை நாங்கள் உறுதி செய்கிறோம். பொருளாதார சீர்திருத்த வேலைத்திட்டத்தை வகுப்பதில் இலங்கை அதிகாரிகள் கணிசமான முன்னேற்றத்தை எட்டியுள்ளனர். அவர்களுடனான உரையாடலை தொடர்ந்து எதிர் நோக்குகிறோம்- என்றுள்ளது. (ஐ)

## பொலிஸ் மா...

இந்த மனுவில், "ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவால் பரிந்துரைக்கப்பட்டமைக்கு அமைய ஈஸ்டர் குண்டு தாக்குதல்களை தடுப்பதற்குத் தவறிய தேசபந்து தென்னகோன் உள்ளிட்ட ஏனைய பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கை யாது?" என்றும் , அவ்வாறு ஒழுக்காற்று நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படவில்லை எனில், விரைவில் அதனை முன்னெடுக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

அத்துடன், உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த ஜனாதிபதி ஆணைக்குழு சமர்ப்பித்த அறிக்கையின் எஞ்சிய 87 தொகுதிகளையும் தமக்கு வழங்குமாறு சபாநாயகர் அலுவலகத்திடம் கோரிக்கை விடுத்திருந்தார். ஆனால், அதனை வழங்க முடியாது என்று ஜூன் 22 ஆம் திகதி சபாநாயகர் அலுவலகத்தால் பேராயருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

"எஞ்சியுள்ள தொகுதிகள் பாராளுமன்ற உறுப்பினர்களின் பயன்பாட்டுக்காக மாத்திரம் பாராளுமன்ற நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளதோடு , அவற்றை பொது மக்களின் உபயோகத்துக்காக வெளியிட முடியாது." மற்றும் "அவற்றை பகிரங்கப்படுத்துவதானது பாராளுமன்ற சிறப்புரிமையை மீறுவதாகும்." என்று சபாநாயகர் அலுவலகம் பேராயருக்கு தெரிவித்தன. எனவே, உயிர்த்த ஞாயிறு குண்டு தாக்குதல்களின் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டியவர்களின் அசமந்த போக்கு மிகுந்த வேதனையளிப்பதாக பேராயர் குறிப்பிட்டுள்ளார்.

## நேற்று நள்ளிரவு...

பஸ் தொழிற்சங்கங்கள் கோரிய, 40 ரூபா ஆக்குறைந்த கட்டணம் மற்றும் 30 சதவீத பஸ் கட்டண அதிகரிப்பு உள்ளிட்ட பஸ் கட்டண திருத்த தொடர்பான பரிந்துரையை தேசிய போக்குவரத்து ஆணைக்குழு, போக்குவரத்து அமைச்சிடம் நேற்று முன் தினம் சமர்ப்பித்திருந்தது.

எவ்வாறியினும், போக்குவரத்து அமைச்சின் முன்மொழிவுக்கமைய, 22 சதவீதத்தினால் பஸ் கட்டணங்களை அதிகரிக்கவும், குறைந்த கட்டணத்தை 40 ரூபாவாக அதிகரிக்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (அ)

## 22ஆவது...

இரட்டைக் குடியுரிமை பெற்றவர் நாட்டின் நிர்வாகத்தில் பங்கேற்பதற்கு இந்தப் புதிய அரசமைப்பு திருத்தச் சட்ட வரைவு தடையாக இருக்கும்.

இந்தப் புதிய திருத்தத்தில், ஜனாதிபதியை நியமிப்பதில் கவனிக்க வேண்டிய விடயங்கள், பிரதமரின் பதவியின் அதிகாரம் மற்றும் தன்மை, புதிய ஆணைக் குழுக்கள் மற்றும் அமைச்சர்கள் சபை எவ்வாறு அமையும் என்பது குறித்து விரிவான விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பொருட்கள் விற்பனைக்கு புதிய நடைமுறை அறிமுகம்!

கொழும்பு, ஜூலை. 01


பொருள்கள் விற்பனையில் பின்பற்றப்பட வேண்டிய பல நிபந்தனைகளை திருத்தியமைத்து சிறப்பு வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, அடுத்த மாதம் 28ஆம் திகதி முதல், அனைத்து பொருள்களின் பொதிகளிலும் அதிகபட்ச சில்லறை விலை, எடை, அளவு, உற்பத்தி மற்றும் பொதியிடப்பட்ட திகதி, காலாவதி திகதி, உற்பத்தியாளரின் பெயர் மற்றும் முகவரி ஆகியவை இடம்பெறவேண்டும்.

2003ஆம் ஆண்டு 09 ஆம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை திருத்தச் சட்டத்தின் பிரகாரம் இந்த அரசிதழ் அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில், இறக்குமதி செய்யப்பட்ட பொருளுக்கு இறக்குமதியாளரின் விளக்கத்தை அச்சிடுவது அல்லது அழியாத லேபிளால் குறிக்கப்படுவது கட்டாயமாகிவிட்டது.

இந்த விடயங்களை இன்றி எந்த வொரு பொருள்களையும் உற்பத்தி செய்யவோ, இறக்குமதி செய்யவோ, விற்பனை செய்யவோ, சேமித்து வைக்கவோ அல்லது விநியோகிக்கவோ கூடாது என பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை தனது வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளது. (அ)




## நாட்டின்...

அதிகரித்ததாக மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதேசமயம், உணவு அல்லாத பொருட்களின் விலைகள் மற்றும் சேவைகள் கட்டணங்கள் 42.4 வீதமாக உயர்ந்துள்ளன.

எரிபொருள் நெருக்கடியால் மரக்கறி வகைகளின் விலைகள் மிக வேகமாக உயர்வடைந்தன. தவிர, அரிசி, தானியங்கள் மசாலா பொருட்கள் ஏனைய உணவுப் பொருட்களின் விலை உயர்வுகளும் பணவீக்க அதிகரிப்புக்கு முக்கிய காரணியாகும். (ஐ)

## குருந்தூர்...

முறைப்படி விகாரை அமைக்கப்படுவதுடன், புத்தர் சிலையை நிறுவவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

இதற்கு தமிழ் மக்கள் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர். இந்த நிலையில், குருந்தூர் மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகத்தினர் மற்றும் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோர், கடந்த 16 ஆம் திகதி, குருந்தூர்மலை தொடர்பில், ஏற்கனவே, முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கை நகர்த்தல் பத்திரம், ஏற்கனவே நீதிமன்றம் வழங்கிய கட்டளையை மதிக்காமல் அவமதிப்புச் செய்து, அங்கு அமைக்கப்பட்ட விகாரை தொடர்பிலும், பொலிஸார், தொடர்ச்சியாக இந்த வழக்கிலே, நீதிமன்றத்திற்கு வழங்க வேண்டிய அறிக்கைகளை வழங்காது, சட்டத்தை மீறிச் செயல்படுபவர்களுக்கு சார்பாகச் செயல்படுகின்றமையையும் முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் சங்க சட்டத்தரணிகள் அனைவரும் இணைந்து, மன்றில், நீதிவானின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இந்தவகையில், குருந்தூர் மலை ஆதிசிவன் ஐயனார் ஆலய நிர்வாகம் மற்றும் பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை, ஆழ்ந்து அவதானித்த நீதிவான், வழக்குத் தொடுநரான பொலிஸார், குருந்தூர் மலையில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பில் விளக்கமளிப்பதற்காக, கடந்த 23 ஆம் திகதிக்கு திகதியிட்டிருந்தார். அன்றைய தினமும் மன்றில் பொலிஸார் மேலும் கால அவகாசத்தைக் கோரினர்.

இதனடிப்படையில், வழக்கு விசாரணை நேற்றைய தினத்துக்கு தவணையிடப்பட்டிருந்தது. நேற்று நடந்த வழக்கில் இரு தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிவான் வழக்கை எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ஐ)

## இலங்கையை...

பதிக்கு இடையில் இடம்பெற்ற சந்திப் பின்போதே இந்த உறுதியளிக்கப்பட்டது.

சர்வதேச நாணய நிதியத்துடனான உறவுகளை வலுப்படுத்துவதற்கு அமெரிக்கா ஆதரவளிப்பதாக அந்நாட்டில் இருந்து வருகை தந்த உயர்மட்ட இராஜதந்திரக் குழு தெரிவித்துள்ளது. அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனும் பல சந்தர்ப்பங்களில் மனிதாபிமான உதவிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாட்டுக்காகவும் மற்றும் அதன் மனிதாபிமான உதவிகளை வழங்கி அமெரிக்கா ஜனாதிபதி ஜோ பைடன் இலங்கைக்கு வழங்கும் ஆதரவுக்காகவும் ஜனாதிபதி தமது நன்றியைத் தெரிவித்தார்.

இலங்கை எதிர்நோக்கும் தற்போதைய நிலைமையை தாம் அறிந்திருப்பதாகவும், நாடு விரைவில் மீண்டு வருமென நம்புகிறார் என்றும் திருமதி ஜூலி ஷங் ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி அநுர திஸநாயக்கவும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டார். (ஐ)

## 10ஆம் திகதி...

நடைபெற்றது.

இதன்போது, நாட்டின் சில பகுதிகளில் தலைப்பிறை தென்பட்டமைக்கான ஆதாரங்கள் கிடைத்தன என்று கொழும்பு பெரிய பள்ளிவாசல் அறிவித்தது.

இதன்படி, எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஈதுல் அல்லாஹ்ஜ் எனப்படும் ஹஜ் பெருநாளைக் கொண்டாட தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## 100,000 தொன்...

டொலர்களை உலக வங்கி உதவித் தொகையாக அளித்துள்ளது. மீதமுள்ள 20 மில்லியன் டொலர்களை லிற்றோ நிறுவனம் வழங்கியுள்ளது.

இந்த இருப்பு நான்கு மாதங்களுக்கு நாட்டுக்கு வழங்கப் போதுமானதாக இருக்கும் என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

எரிவாயு கையிருப்பில் 70 சதவீதம் உள்நாட்டு நுகர்வோருக்கு வழங்கப்படும். இவற்றில் 12.5 கிலோ எடையுள்ள 50 இலட்சம் சிலிண்டர்கள், 5 கிலோ எடையுள்ள 10 இலட்சம் சிலிண்டர்கள், 2.5 கிலோ எடையுள்ள 10 இலட்சம் சிலிண்டர்களை நிரப்ப முடியும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

மீதமுள்ள 30 சதவீத எரிவாயு சிலிண்டர்கள் வணிக பயன்பாட்டிற்கு வழங்கப்படும். லிற்றோ நிறுவனம் 20 மில்லியன் டொலர்கள் செலவில் கொள்வனவு செய்யப்பட்ட 33 ஆயிரம் தொன் சமையல் எரிவாயு தொகுதி வரும் வாரத்தில் நாட்டை வந்தடையும், அவை உடனடியாகவே விநியோகத்துக்கு அனுப்பப்படும் என்றும் பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# திருமலையில் துப்பாக்கியுடன் நால்வர் கைது!

திருமலை, ஜூலை 01

திருகோணமலை, பேரமடு காட்டுப் பகுதியில் சட்ட விரோதமாக அனுமதியின்றி உள்நாட்டுத் துப்பாக்கியை வைத்திருந்த நான்கு பேரைக் கைதுசெய்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கந்தளாய்-அக்போகம பகுதியைச் சேர்ந்த இருவரையும், கந்தளாய்-அக்போபுர பகுதியைச் சேர்ந்த இருவரையும் கைதுசெய்துள்ளதாக வனஜீவராசி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கந்தளாய் பிராந்திய வனஜீவராசி அதிகாரிகளுக்குக் கிடைத்த இரகசியத் தகலின் அடிப்படையிலேயே சந்தேகநபர்களைக் கைதுசெய்துள்ளதாக வனஜீவராசி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்களிடமிருந்து உள்நாட்டுத் துப்பாக்கி, துப்பாக்கிக் குண்டுகள், மருந்துகள், கத்தி மற்றும் லைட் ஆகியவற்றைக் கைப்பற்றியுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

சந்தேகநபர்களைத் தடுத்துவைத்து விசாரணைகளை மேற்கொண்டு வரும் கந்தளாய் பொலிஸார், அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (அ)

## மல்லாவி மருத்துவமனைக்கு சந்நிதியான் ஆச்சரிமம் உதவி!

வடமராட்சி, ஜூலை 01

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் மல்லாவி - ஆதார வைத்தியசாலைக்கு 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான மருத்துவப் பொருள்கள் வழங்கப்பட்டன.

மருத்துவ பொருட்களுக்கான பற்றாக்குறையை கருத்தில் கொண்டு மல்லாவி ஆதார வைத்தியசாலைக்கு இந்த மருந்துப் பொருட்களை மருத்துவமனையின் அத்தியட்சகர் கலாநிதியிடம் மோகனதாஸ் சுவாமிகள் வழங்கி வைத்தார்.

இந்த உதவித் திட்டத்தில் மருத்துவர் செந்தில் குமரன் மற்றும் ஆச்சிரம தொண்டர்களும் கலந்து கொண்டனர். (ஐ-2)

## தொழில்நுட்ப அமைச்சின் செயலராக ஜயந்த டி சில்வா

கொழும்பு, ஜூலை 01

தொழில்நுட்ப அமைச்சின் செயலாளராக ஜயந்த டி சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

அவருக்கான நியமனக் கடிதம், நேற்று வியாழக் கிழமை காலை கொழும்பு, கோட்டை ஜனாதிபதி மாளிகையில் வைத்து ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத்தினால் கையளிக்கப்பட்டது. (அ)









## சீன தூதுவருடன் தம்மிக்க பேச்சு!

கொழும்பு, ஜூலை 01

இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ ஷென்ஹோங் மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் அபிவிருத்தி அமைச்சர் தம்மிக்க பெரேரா ஆகியோருக்கிடையில் நேற்று முன் தினம் கொசீனத் தூதரகத்தில் சந்திப்பு இடம்பெற்றது.

சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பொருளாதார மற்றும் வர்த்தக பிரச்னைகள் மற்றும் இலங்கையில் சீன முதலீடுகள் குறித்து இங்கு கலந்துரையாடப்பட்டுள்ளது.

மேலும், இரு நாடுகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த பல விடயங்கள் விவாதிக்கப்பட்டதாக சீன தூதரகம் தனது ருவிட்டர் கணக்கில் தெரிவித்துள்ளது. (அ)

## மரண அறிவித்தல்

தோற்றம்
20 - 06 - 1995



மறைவு
28 - 05 - 2022

### ஜெகதீஸ்வரன் சஜிந்

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டன் Charlton ஐ வதிவிடமாகவும் கொண்ட ஜெகதீஸ்வரன் சஜிந் அவர்கள் 22.05.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று அகாலமரணம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்ற இராசையா, பொன்னம்மா தம்பதிகள், காலஞ்சென்ற நாகமணி, இரத்தினம் தம்பதிகளின் அன்புப் பேரனும்,ஜெகதீஸ்வரன்(ஜெகன்- ஒட்டுசுட்டான்), நாகரஜனி(வவா- சிலாவத்தை) தம்பதிகளின் மூத்தபுதல்வரும்,அஜந் அவர்களின் அன்புச் சகோதரரும், இலங்கேஸ்வரன்- சுவாகினி, காலஞ்சென்ற ஜோகேஸ்வரன்- சந்திரகலா, இராஜேஸ்வரன்- ஜெயசுதா, ரங்கேஸ்வரன்- றெனோஜா, கேதீஸ்வரன்- கௌசலா, பரஞ்சோதி- காலஞ்சென்ற நாகேஸ்வரி, சண்முகநாதன்- நாகம்மா, பாலச்சந்திரன்- நாகரத்தினம், விஸ்வலிங்கம்- நாகராணி, பேரம்பலம்- நாககன்னிகா, சுந்தரேஸ்வரன்- நாகநந்தினி, பாலபாஸ்கரன்- நாகரஞ்சினி ஆகியோரின் பெறாமகனும், ஞானப்பிரகாசம்- கமலேஸ்வரி, கோபாலகிருஸ்ண பிள்ளை- கன்னிகாபரமேஸ்வரி, திரவியராசா- காலஞ்சென்ற கனகேஸ்வரி, மகேந்திரம்- காலஞ்சென்ற இராஜேஸ்வரி, கமிலஸ்- திலகம், நாகேந்திரம்- சியாமளா, நாகராசா- வசந்தா, நாகேஸ்வரன்- குஞ்சன்செல்வி ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**ஆர். கேதீஸ்- சித்தப்பா**

தொடர்புகளுக்கு:
**ஜெகன் - தந்தை** Mobile : +447956031672
**வவா - தாய்** Mobile : +447760236840
**அஜந் - சகோதரன்** Mobile : +447874024922
**கேசவன் - அத்தான்** Mobile : +447888091020
**கேதீஸ் - சித்தப்பா** Mobile : +447776838880
**ரங்கன் - சித்தப்பா** Mobile : +94770757333
**ராசன் - சித்தப்பா** Mobile : +17787145053
**கன்னிகா - பெரியம்மா** Mobile : +94714148046
**றஞ்சி - பெரியம்மா** Mobile : +94715951989

## யாழ். மோட்டார் போக்குவரத்து திணைக்களம் 3 நாள்களே திறப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 01

யாழ் மாவட்டத்தில் போக்குவரத்து திணைக்களத்தின் செயற்பாடு மூன்று தினங்கள் மட்டுமே நடைபெறும் என மாட்ட அரசாங்க அதிபர் தகவல் வெளியிட்டுள்ளார்.

நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் பெற்றுக் கொள்வதில் உள்ள வரையறைகளால் போக்குவரத்து துறையில் எழுந்துள்ள பிரச்சினைகள் காரணமாக மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தை வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் திறக்காதிருக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் யாழ்.மாவட்ட போக்குவரத்து திணைக்களமும்

சேவை பெறுநர்களின் தேவை கருதி திங்கள், செவ்வாய், மற்றும் புதன் ஆகிய கிழமைகளில் மட்டும் திறந்திருக்கும் என்பதுடன் குறிப்பிட்ட நாட்களில் சேவை பெறுநர்கள் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## மரண அறிவித்தல்

தோற்றம்
13 - 08 - 1947



மறைவு
28 - 06 - 2022

### மாணிக்கம் சண்முகநாதன்

(உத்தரவு பெற்ற நில அளவையாளர்)

யாழ். உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், மல்லாகம் நீதிமன்ற வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் சண்முகநாதன் அவர்கள் 28.06.2022 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற மாணிக்கம், நாகமுத்து தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கோவிந்து, ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், உமாதேவி அவர்களின் அன்புக் கணவரும்,கௌதமன், கௌசிகன்(கட்டடப் பொறியியலாளர் - லண்டன்), கௌரீசன்(இலத்திரனியல் பொறியியலாளர்- நியூசிலாந்து), கௌதீபன்(கட்டடப் பொறியியலாளர்- பிரித்தானியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,இராஜேஸ்வரி, துஷ்யந்தி (பிரித்தானியா), சரளா(நியூசிலாந்து), டினியா (பிரித்தானியா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும்,கமலநாதன்(அவுஸ்திரேலியா), தனலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரரும்,கந்தசாமி, ரதி(அவுஸ்திரேலியா), மீனாட்சிதேவி, புனிதராணி, காலஞ்சென்றவர்களான இரத்தினசிங்கம், தவமணி, நடேசு, தங்கவேலு ஆகியோரின் பாசமிகு மைத்துனரும்,தர்ஷிகா, ஸம்மிகா, துஷித்திரன்(அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும்,வாசுகி, யசோதா, யசோதரன், ரவீந்திரன், ரவிசந்திரன், முரளிதரன், சுகந்தி, மைதிலி ஆகியோரின் சிறிய தந்தையும்,

கோமகள், அர்னிகா இயல்(நியூசிலாந்து), அட்விகா இன்னிலா(நியூசிலாந்து), சிவன்யா(பிரித்தானியா), சிம்மயா (பிரித்தானியா), கனிஸ்கா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.அன்னாரின் இறுதிக்கிரியை 01-07-2022 வெள்ளிக்கிழமை அன்று மு.ப 11:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் மல்லாகம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

தொடர்புகளுக்கு:
**கௌசிகன் - மகன்** Mobile : +447447904259
**கௌரீசன் - மகன்** Mobile : +64211745041
**கௌதீபன் - மகன்** Mobile : +447532789531

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 01.07.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய ராசி பலன்கள்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துனையாளர் திரு.யாழ்பாவாணன்



7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : கச்சேரி ஆரம்பம்-மறுஒளிபரப்பு

**பகல்**

12:00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை




01.00மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்-பெங்களுர் டேய்ஸ்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹோலிவூட் சுப்பர்-10




**இரவு**

7.00 மணி : ரசிகன் எனகின்ற தலைவன்-நகைச்சுவை நிகழ்ச்சி
08.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் - தொழில் கல்விக்கான தொழில் வழிகாட்டிகளும்



10.00 மணி : நேருக்கு நேர்

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் றிவி

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு